போர் வெறியோடு புறப்பட்டவனை
தர்ம நெறி நிற்கப் பணித்த தேசம்

# கலிங்கம்

போர்-01 பரணி - 08

பல்சுவை இதழ்



பிறிண்டிங் துறையில் 15 வருட சிறந்த அனுபவமுள்ள முகாமைத்துவத்தின் கீழ்
யாழ் மக்களுக்கு சிறந்த பிறிண்டிங் சேவையை வழங்கும் நோக்குடன்
யாழ் குளப்பிட்டி சந்தி, கொக்குவிலில் தனது பிரமாண்டமான தொழிற்சாலையுடன்

# PRINT Master


# பிறிண்ட் மாஸ்ரர்

## உங்கள் தெரிவு இந்நிறுவனமே!

SUCCESS

- அதி விரைவாக அச்சிடும் நவீன ரக இயந்திரங்கள் மூலம் மிகத்துல்லியமான அச்சுப்பதிப்பு.
- குறைந்த விலையில் உங்கள் எண்ணத்திற்கேற்ப தரமான படைப்புக்களைப் பெற்றிடும் வாய்ப்பு.
- வாடிக்கையாளர்களுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கி வேலைகளை இலகுபடுத்துவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் ஊழியர்கள்.
- மிகவும் தனித்துவமான முறையில் கணினி வடிவமைப்புக்களை மேற்கொள்ளக்கூடிய பல வருட முன்னனுபவமுள்ள வடிவமைப்பாளர்கள்.
- திருமண அழைப்பிதழ்கள் மற்றும் அனைத்துவிதமான அழைப்பிதழ்களின் சிறந்த தெரிவிற்கான காட்சியறை.

**இவையனைத்தையும் ஒன்றிணைத்து விரைவான சேவையை வழங்கும் நிர்வாக கட்டமைப்பு**



## PRINTERS

Books | Handbills | Posters | Brochures | File Covers | Letter Heads | Visiting Cards | Envelopes | Calendars | Labels | Logo creation | Wedding cards | All kind of stickers | ID Cards | Awards | Shields | Medals | T-shirt Printing | Mug Printing

☎ 021 205 3322

## DIGITAL PRINTING

Digital Name Boards | Digital Light Boards | Banners | Stickers | X-Stands | Vehicle Branding | All kind of Outdoor Advertising

வீழ்ந்திடாத வீரம்
மண்டியிடாத மானம்

# கலிங்கம்

போர் - 01 பரணி - 08

260B இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்

kalingaminfo@gmail.com Cell: 0772297265

ஆசிரியர் குழு -
திரு.செ.கமலக்கண்ணன்
திருமதி.ர.தர்மினி
திரு.வ.பார்த்திபன்
ஆலோசகர் -
திரு.தி.நடனசபேசன்
அலுவலக உதவி -
செல்வி.ச.தவரூபா
செல்வி.சூ.சிந்துஜா
ஓவியக்கலை -
திருமதி.எஸ்.மேரிடியூலா
திரு.எஸ்.சந்திரசேகர்
இதழழகு -
தாயகம் டிஜிற்றல்,
யாழ்.பல்கலைக்கழம் அருகில்,

பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரையாளரின் கருத்துக்கள் அவர்களின் சொந்தக் கருத்துக்களே

**விளம்பரங்களுக்கு**

கலிங்கம், யாழ்.ஏயட், 75/1 பலாலி வீதி, கந்தர்மடம்

**சந்தா தொடர்பான விபரங்கள்**

(ஓர் ஆண்டுக்குரியது, தபால் செலவு உட்பட)

| | |
|---|---|
| இலங்கை | 600 ரூபா |
| இந்தியா | 750 ரூபா |
| கனடா | 45 கனடியன் டொலர் |
| இங்கிலாந்து | 35 பவுண்ஸ் |
| ஆவுஸ்ரேலியா | 45 அவுஸ்ரேலிய டொலர் |
| ஐரோப்பா | 40 யூரோ |
| ஏனையவை | 45 டொலர் |

# உள்ளே ...





30 பண்டாரவன்னியன்


12 திடுக்கிடும்




24 அடக்கம் அணிகலன்



36 அபிவிருத்தியா



06 > பல்ய விவாகம்
16 > சிரிக்க சிரிக்க சிரிப்பு
20 > வேதனைகள் சாதனைகள்
48 > தோழர் பானாத்தம்பு

## எங்களிடம் இருந்து...

# ஆக்கபூர்வமாக செயற்படுவோம்


கலிங்கம் இதழின் செயற் குழுவிலும் யாழ். எய்ட்டின் ஆலோசகர் குழுவிலும் இருந்து தொடர்ச்சியாக அரசியல், பொருளாதாரம் சார்ந்த கட்டுரைகளை புள்ளி விபரங்களுடன் எழுதிய பொருளியல் அறிஞர் அமரர் சி.வரதராஜன் அவர்களின் மறைவு உண்மையில் யாராலும் ஈடுசெய்ய முடியாதது. அது மறுப்பதிற்கில்லை. ஆனால் இழப்புக்கள் எமக்கு புதியவையல்ல. இழப்புக்கள் எமது வழித்தடத்தினை மாற்றி விடாது. ஒரு உயரிய இலட்சியம் நோக்கிப் பயணிக்கும் நாம் இவ்வாறான இழப்புக்களைக் கண்டு நிலை குலைந்து கொள்கை மாறப்போவதில்லை. அது எம்மை மட்டுமின்றி மறைந்தவர்களையும் அவமதிக்கும் செயலாகும். எனவே எத்தடைகள் வரினும் எவ் இழப்புக்களை சந்தித்தாலும் கொண்ட இலட்சியத்திற்காகஎம் பணி தொடரும். ஆனால் இவ்வாறான அறிஞர்களின் இழப்பு எமது இலட்சியத்தினை அடைவதற்கான இடைவெளியை மட்டும் அதிகமாக்கும். இருந்த போதிலும் அவர்களின் ஆத்ம பலம் எமக்கு வழிகாட்டும்.

கடந்த வருடம் கலிங்கம் இதழ் மூலம் கிடைத்தவருமானம் முழுமையும் யாழ்.எய்டின் நலிவுற்ற மாணவர்களின் கல்வி மேம்பாட்டின் பொருட்டு கற்றல் உபகரணம் வழங்குதல், இலவசக் கல்வி கருத்தரங்கு நடாத்துதல், விடுதியில் உள்ள மாணவர்களின் செலவீனம் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு வேதனம் வழங்குதல் என பல் வேறு சமூக நலத்திட்டங்களுக்கு பயன்படுத்தி உள்ளோம். இவ்வாண்டும் இவ்வாறான செயற்றிட்டங்களை ஆரம்பித்துள்ளோம். எனவே தங்களால் ஆன முழுமையான ஆதரவை கலிங்கத்திற்கு வழங்குவீர்கள் என எதிர்பார்க்கின்றோம்.



இலங்கைத்தீவில் ஒரு மரத்தில் படரும் கொடி என வர்ணிக்கப்பட்ட தமிழ் மக்கள் பூர்வீகமாக வாழுகின்ற தேசத்திலே தமது வாக்குப் பலத்தினைப் பிரயோகிப்பதன் மூலம் இலங்கைத்தீவின் ஆட்சிப்பீடத்தினை நிர்ணயிக்கின்ற சக்தியாக உள்ளனர் என்பதனை கடந்த தேர்தல் சிங்களப் பேரினவாதிகளுக்கு போதித்துள்ளது. அதன் பிரகாரம் தற்போது ஆட்சிப்பீடம் ஏறியிருக்கும் மைத்திபால சிறிசேனா அவர்கள் தமிழர் பிரச்சனைக்கு ஏற்கத்தக்கதான தீர்வை முன்வைப்பாரா? அல்லது முன்னைய ஆட்சியாளர்கள் போல் காலத்தை இழுத்தடிப்பாரா? என்பதனை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ஆனால் ஏப்ரல் மாதம் பாராளுமன்ற தேர்தல் வர இருப்பதனால் இலங்கைத்தீவில் வீசும் தற்காலிக வசந்தத்தை வடக்கு மக்களும் அனுபவிக்கலாம். ஆனால் இச் சிறு சிறு சலுகைளை ஏற்றுக் கொண்டாலும் அவற்றுக்குள் நாம் எம்மை கரைத்து விடுவது எமது எதிர்காலத்தை கேள்விக் குறியாக்கும். ஏனெனில் தேர்தலை கருத்திற் கொண்டு கிடைக்கும் சலுகைகளை நாம் ஏற்றுக் கொள்வது நாளை அவையே எமது தீர்வாகக் கூடிய அபாயகரமும் உள்ளது. ஆகவே தமிழ் மக்கள் ஆகிய நாம் ஏமாறாமல் நிரந்த தீர்வுக்காக அணிதிரள வேண்டும்.

கூட்டமைப்பு தேர்தல் கால வீரம் பேசி கதிரைகளைக் கைப்பற்றியது போல் அல்லாமல் ஆக்கபூர்வமாக செயலாற்ற முன்வரவேண்டும். பல தாசாப்தங்களாக பாராளுமன்ற கதிரைகளை அலங்கரிப்பவர்கள் தங்களால் முடியாது விட்டால் ஏனையோருக்கு வழி விட்டு ஒதுங்கிக் கொள்ளவேண்டும். பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இரண்டு முறைகளுக்கு மேல் பராளுமன்ற உறுப்பினர்களாக இருக்க முடியாது என சட்டம் கொண்டு வந்தால் தான் இது சாத்தியமாகும். எனவே தமிழ் மக்களாகிய நாம், யார் உண்மையாக சேவை செய்கின்றார்கள்? யார் எமை ஏமாற்றி தம்மை வளப்படுத்திக் கொள்கின்றார்கள், என்பதனை அறிந்து வாக்களிப்பதன் ஊடாகவே எமது தனித்துவத்தை நிலை நாட்டலாம்.

# நீங்காத நினைவுகளுடன்










## தமிழ்த் தேசிய புலமையாளர்

# சின்னத்துரை வரதராஜன்

(ஈழத்தின் பிரபல பொருளியல் பேராசான்,
முன்னாள் விரிவுரையாளர், பொருளியல்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்,
ஆலோசகர் யாழ்.ஏய்ட், கலிங்கம்)




GET THE RIGHT LOOK
MODERN & LUXURY
High Quality Products
Available Under One Roof
THE
UNITED
HOME NEEDS
LANKATILES HUIDA GROHE American Standard MOMALI JAT Get the right finish, first. SWISSTEK
Multibond Hants DANKOTUWA pure NIPPON CEMENT Nestle
No:469, K.K.S Road, Jaffna.
Tel: 021 221 9565, 021 567 0166




Yarl Aid
இலவசக் கல்விக் கருத்தரங்கு
2014
Sponsored By:
YOUTH EMPOWERING YOUTH
Yarl Aid



# பதிவுகள்




# பால்ய விவாகமும் பரிதாப வாழ்வியலும்



"**எனக்கு** திருமணம் நடந்தபோது என்னைச் சுற்றி என்ன நடந்துக்கொண்டிருக்கிறது என்றே என்னால் அறிய முடியவில்லை" என்கிறார் மனியம்மா. "அப்போது எனக்கு ஆறு வயதுதான். கல்யாணமென்றால் வீட்டை விட்டு" இன்னொரு வீட்டுக்கு செல்லவேண்டுமென்று மட்டுமே எனக்கு தெரியும். நான் போக மாட்டேனென்று அழுது கொண்டேயிருந்தேன். ஆனாலும் என்னை வலுக்கட்டாயமாக அனுப்பி வைத்தனர்" என்கிறார் தொடர்ந்து.



மனியம்மா, ஆந்திராவின் ஒரு கிராமத்தில் தனது உறவினர் சூழ அமர்ந்திருக்கிறார். அவர் கட்டியிருந்த சிவப்பு புடவையில் பதினொரு வயதிற்கும் கீழானாவராகவே தெரிந்தார். ஒரு தந்தையால் தன் குழந்தைக்கு இதை மனமுவந்து செய்ய முடியமா? ஆனால், மணியம்மாலின் தந்தையோ "இங்கெல்லாம் அப்படித்தான் பழக்கம் என்கிறார். இதுதான் எங்களின் பாரம்பரியம், பெண்கள் சிறிய வயதில் மணமுடித்துவிடவேண்டும். கணவர்கள் வயதில் எத்தனை பெரியவர்களாக இருந்தாலும் சரி, சூழ்நிலையை அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்"எனது மூத்த மகளுக்கு திருமணம் செய்து கொடுக்கும் போது அவளுக்கு வயது-07 மருமகனுக்கு 34வயது" என சர்வ சாதரணமாக கூறி முடிக்கிறார்.



இந்தியாவில் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான சிறுமிகளுக்கு இப்படி திருமணமாகிறது. வயதுக்கு வந்ததும் குழந்தை பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் எதிர்ப்பார்க்கப் படுகின்றனர். இந்தியாவில் பாதிக்கும் மேற்பட்ட பெண்களுக்கு 18 வயதுக்கு முன்பே திருமணமாகி விடுவதாக ஒரு ஆராய்ச்சி சொல்கிறது. அப்படி திருமணமான பெண்கள் உடனடியாக பிள்ளை பேற்றுக்கும் ஆளாகி தங்களது பெண்மையையும் நிருபிக்க வேண்டும்.இலங்கையைப் பொறுத்தவரை பால்ய விவாகம் முற்றாக இல்லை என்றே கூறலாம். ஆனால் பருவம் அடைந்த பின்னர் சிறுவர் திருமணங்கள் நடக்கின்றன. மட்டக்களப்பு மாவட்டம் இதில்


முன்னிற்பதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

குழந்தை பேற்றுக்கு ஆளாகும் முன்பே மனியம்மாவின் திருமணம் முறிந்துவிட்டது. மணமான இருவருடங்களிலேயே, மனியம்மாவின் கணவர்(வயது 20) மனியம்மாவை வீட்டுக்கு அனுப்பி விட்டார். 20 வயதான அவருக்கு மனியம்மா பாலுறவுக்கு ஏற்ற வகையில் இல்லையென்பதுதான் காரணம். கணவர் உங்களை எப்படி நடத்தினார் என்ற கேள்விக்கு மனியம்மா தயங்குகிறார். "அவரைப் பற்றி எதையும் நான் பேச விரும்பவில்லை" என்கிறார்.

அவர் அந்த அதிர்ச்சியிலிருந்து இன்னும் மீளமுடியாதவராக தென்பட்டார். மற்றுமொரு முறை மணம் செய்துக்கொள்வாரா என்ற கேள்விக்கு இல்லையென்று தலையசைக்கிறார். அக்ஷய திருதியை விழாவின் போது, பெரும்பாலான இந்திய கிராமங்கள் திருமணத்திற்கான ஏற்பாடுகளிலும், பட்டாசுகளிலும் பெண்களின் பாடல்களிலும் மூழ்கியிருக்கும். அந்த திருமணங்களின் மணமக்கள்கள் மனியம்மாவைப் போன்ற குழந்தைகள்தான்.

வடகிழக்கு மாநிலத்தைச் சேர்ந்த ஹசீனா பள்ளியை விட்டு நிற்கவில்லை அவர் பள்ளிக்கே செல்லவில்லை. ஹசீனாவுக்கு 13 வயதில் முதல் முறையாக மாதவிலக்கு ஏற்பட்டது. ஹசீனாவின் தாய் இறந்ததும் அவரை வளர்த்த அத்தை ஹசீனா உடனே திருமணம் செய்துக்கொள்ள வேண்டுமென்றார். ஹசீனாவுக்கு அவர் என்ன சொல்கிறாரென்று அப்போது விளங்கவில்லை தனது வாழ்க்கையை முற்றிலுமாக திருப்பிப்போடுமென்றும் தெரிந்திருக்கவில்லை. "திருமணம் ஒரு விளையாட்டு என்று நினைத்தேன்" என்கிறார்

, கணவரது மூங்கில் குடிசையில் அமர்ந்தபடி. அவரது கைகள் புடவையின் முந்தானையின் ஓரங்களைத் திருகியபடியிருக்கின்றன. ஹசீனாவின் வயது இப்போது 15. அவர் ஐந்து மாத கர்ப்பமாக இருக்கிறார். பிரசவங்களினால் ஏற்படும் சிக்கல்களும், உடல் நலத்தை பற்றிய அறியாமையும் மருத்துவ வசதியின்மையும் தகுந்த நேரத்துக்கு கிடைக்காத கவனிப்பும் இந்த மரணங்களை அதிகப்படுத்துகின்றன. அதற்கு ஹசீனாவும் விதி விலக்கல்ல.



ஜெய்ப்பூரைச் சேர்ந்த இரண்டு சகோதரிகள் வயது முறையே 11 மற்றும் 13 அஞ்சலி மற்றும் கரிஷ்மா திருணத்துக்கு தயாராகிக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்களது குடும்பத்துப் பெரியவர்கள் அவர்களுக்கு தயிரும் மஞ்சளும் சேர்த்து தலையைக் குளிப்பாட்டிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களது கைகளிலும் கால்களிலும் மருதாணி

இடப்பட்டிருக்கிறது. "ஆமாம், எனக்கு பயமாக இருக்கிறது, இருக்காதா என்ன?" என்கிறார் கரிஷ்மா. "நாங்கள் எங்கள் கணவர்களை இன்னும் சந்திக்கவில்லை" என்கிறார்கள், லேசான எரிச்சலுடன்.

எப்படி தனது வீட்டையும், சகோதரியுடன் பள்ளிக்குச் செல்வதையும் நேசித்தார்கள் என்று ரசித்து சொல்கிறார்கள்.தற்போது எல்லாமே முடிவுக்கு வந்துவிட்டது ."கணவரது வீட்டிலிருந்து பள்ளிக்கூடம் செல்வது நடக்காத காரியம். அங்கு சமையலும் வீட்டு வேலைகளையும்தான் செய்ய வேண்டும். வேறு ஒன்றும் இல்லை. தலையை எப்போதும் துணியால் மூடியிருக்க வேண்டும். எனது மாமியார் என்ன சொல்கிறாரோ அதை கேட்டு நடக்க வேண்டும்".

குழந்தைத் திருமணங்கள் இந்திய சட்டத்திற்கு புறம்பானவை. குழந்தை திருமண தடுப்புச் சட்டம் பிரிட்டிஷ் காலத்திலேயே, 1929, நிறைவேற்றப்பட்டது. அப்போது பார்ப்பனிய ஆதரவாளர்கள், இந்துமத அமைப்புகள் இதை கடுமையாக எதிர்த்தனர். பின்னர் அம்பேத்கர் அரசியல் சாசனம் எழுதிய காலத்திலும் இந்த எதிர்ப்பு இருந்தது. பார்ப்பனியத்தின் நிலவுடமைப் பண்பாட்டில் ஊறியிருந்த சமூகத்தில் குழந்தைகள் திருமணம் ஆழமாக பதிந்திருந்தது.

திருமணமாவதற்கு பெண்ணுக்கு 18 வயதும் ஆணுக்கு 21 வயதும் நிரம்பியிருக்க வேண்டும். 1947-ல் போலிச் சுதந்திரம் பெற்றபின் இந்திய அரசாங்கம் இந்த சட்டதிட்டங்களை கடைப்பிடிப்பதில் பெரிய ஆர்வம் காட்டவில்லை. திருமண சீசன்களில் நான்கு வயதான குழந்தைக்கு கூட மணம் நடப்பதை காணலாம். இந்தியாவிலேயே ராஜஸ்தானில்தான் அதிக அளவில் குழந்தை திருமணங்கள் நடைபெறுகின்றன. ஜோத்பூரில் குழந்தைகள் நலவாரியத்தின் அதிகாரிகள் தொலைபேசியில் அது குறித்த புகார் குரலுக்காகக் காத்திருக்கிறார்கள். ஆனால் அப்படி புகார்கள் பெரிய அளவில் வருவதில்லை.

சட்டத்தை நிறைவேற்றுவதற்கும் அதை நடைமுறைப்படுத்துவதற்கும் இடையில் ஒரு பாரிய இடைவெளி இருக்கிறது. Unicef தென்னிந்தியத்தலைவர் இதுபற்றி கூறுகையில்,"போலீசும் இந்த பாரம்பரிய பின்னணியிலிருந்தே வந்தவர்கள். அவர்கள் தங்களது சொந்த குடும்பங்களுக்கெதிராக பேச விரும்புவதில்லை. பல நூற்றாண்டு காலமாக தொடரும் இந்த பழக்கத்தை தவறென்று சொல்ல அவர்கள் விரும்புவதில்லை. இதுபற்றி அவர்களுக்கே பயிற்சியும் அறிவும் தேவைப்படுகிறது" என்கிறார்.

இந்த பயிற்சியும் அறிவும் வரும் வரையும் தங்களது வாழ்க்கையை குழந்தைத் திருமண மேடையில் தியாகம் செய்யும் பல்லாயிரக்கணக்கான சிறுமிகளின் நிலைமை என்ன? குழந்தைத்திருமணம் பால்ய விவாகம் என்ற பெயரில் தொடர்ந்து வந்துள்ளது. இதற்கு சாதிய படிநிலையும் ஒரு காரணம். பிறப்பால் வரும் சாதியும், சொத்துடைமையும் திருமணத்தை பல்வேறு சாதிகளுக்குள் நடைபெறுவதை அனுமதிப்பதில்லை.


மேலும், இளைய தலைமுறையினர் இவ்விதிகளை உணர்ச்சிவசத்தில் மீறுவதைத் தடுக்கவும் இந்த குழந்தைத் திருமணங்கள் பயன்படுகின்றன. மேலும், தற்போது இப்பழக்கம்

பொருளாதாரத்தில் மிகவும் பின் தங்கியவர்களிடமே பெருமளவில் காணப்படுகிறது. ஆனால் இந்தி பேசும் மாநிலங்களைப் பொறுத்த வரை கிராமங்களில் உள்ள ஆதிக்க சாதி வர்க்கத்தினரிடமும் இந்த பழக்கம் காணப்படுகிறது. இவர்களெல்லாம் ஏழைகள் அல்ல.

எடுத்துக்காட்டாக, ஹசினா வாழும் அஸ்ஸாம், சில பத்தாண்டுகளாகவே வளர்ச்சியில் பின் தங்கியுள்ளது. நிர்வாக அலட்சியமும், ஊழலும், ராணுவ அடக்குமுறையும் தொடர்ந்து இருக்கிறது. இது பிரசவகால மரணங்களை பெருமளவு உயர்த்தியுள்ளது. அரசாங்க புள்ளிவிவரப்படி, 100,000 பிரசவங்களில் 480 மரணங்கள் ஏற்படுகின்றன.

ஹைதராபாத்தின் மகாத்மா காந்தி மருத்துவமனையில் 15வயதுப்பெண் அவசர கால சிகிச்சைக்கு விரைந்து எடுத்துச் செல்லப்படுகிறாள்.. வலியால் துடித்தபடி இருக்கும் இந்தப்பெண்ணே, ஒரு குழந்தைய குழந்தையை சுமந்தால் ஏற்படும் நிலைக்கு, ஒரு சிறந்த உதாரணம் என்கிறார் டாக்டர் ஷைலஜா. ”அவளுக்கு ரத்தக்கொதிப்பு உயர்திருக்கிறது. அவளது இடுப்பு மிகவும் சிறியதாக இருப்பதால் குழந்தை வெளியே வர முடியாமல் மாட்டிக்கொள்ளும். இந்த நேரங்களில் சிசேரியனைத் தவிர வேறு வழியில்லை,” என்கிறார் அவர்.”Broken Voice” என்ற புத்தகத்தில் ஒரு பெண் 13 வயதில் திருமணம் என்றால் எப்படி இருக்கும் என்பதை “என் கணவனை பார்த்து எனக்கு மிகவும் பயமாக இருந்தது. அவர் என்னைவிட மிகவும் பெரியவராக இருந்தார்.. அவர் என்னைத் தொடக்கூடும் என்பதால், வீட்டுக்கு அவர் வருவதையே நான் விரும்பவில்லை.” என்கிறார்.

*18 வயதுக்குள்ளான பெண்களிடம்தான் அதிகளவு எச்ஐவி நோய்த்தொற்று இருப்பதாக ஆராய்ச்சி ஒன்று கூறுகிறது. பாதுகாப்பில்லாத பாலுறவு, ஒருவருக்கு மேற்பட்டவர்களுடன் உறவு போன்றவற்றை ஆண்களுக்கிடையே முறைப்படுத்துவது இன்றுவரை சவாலாக இருக்கிறது. குழந்தைத் திருமணங்கள் நடைபெறும் சமூகங்களில் அது இன்னும் அதிகமாக இருக்கிறது.*



ஹைதராபாத்தின் அந்த மருத்துவ மனையில் பிரசவ அறைகளிலொன்றில் நிற்கிறார் டாக்டர் ஷைலஜா. “விரைவில் மகப்பேறுக்கு ஆளானால் ஏற்படும் கதியை பாருங்கள்” என்று சொல்லி, அப்பெண்ணின் நாக்கை உள்அன்னத்தில் மடக்கச் சொல்கிறார். தாய் அனீமிக்காக இருப்பதோடு, குழந்தையும் மிகுந்த எடை குறைவாக இருப்பதாகச் சொல்கிறார். அதிர்ஷ்டமிருந்தால் இவள் பிழைப்பான் என்று

ஆங்கிலத்தில் சொன்னதை அந்தத்தாய் புரிந்து கொள்ளவில்லை.

அஸ்ஸாமைச் சேர்ந்த ஹசீனாவின் நிலைமை இன்னும் மோசம். அவரைப் போன்று மூன்று மில்லியன் மக்கள் வசிக்கும் இந்த கிராமங்களில் சிலவற்றிற்கு இன்னும் மின்சார வசதி கூட இல்லை. சாலைகளும், பள்ளிகளுமோ அல்லது பொதுவசதிகளோ எதுவும் இல்லை. பெரும்பாலும் ஆற்றில் மீன் பிடித்தோ விவசாயம் செய்தோதான் வாழவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். இன் நிலையிலே தான் இங்கு இலங்கையில் உள்ள மக்களுக்காக இந்திய அரசு வீட்டுத்திட்டமும், தண்டவாளமும் வழங்குகின்றது. எம்மில் இந்தியாவுக்கு மிக்க கரிசணை.

30 மில்லியன் மக்கள் வசிக்கும் இந்த மாநிலத்தில் விவசாயத்துக்கு போதிய நிலையில்லா விட்டாலும் எங்கும் செல்ல வசதிவாய்ப்பின்றி இங்கேயே வசிக்க நிர்பந்திக்கப்படுகிறார்கள். ஹசீனா அருகிலிருக்கும் ஒரு வடகிழக்கு ஆராய்ச்சி நிலையத்தின் மருத்துவமனைக்குச் செல்கிறார். அரசாங்க உதவி பெறும் அந்த மருத்துவமனையிலிருந்துதான் பிரம்மபுத்திரா நதியைக் கடந்து மருத்துவ உதவிகள் ஹசீனாவின் கிராமத்துக்கு வரவேண்டும்.

ஹசீனாவை பரிசோதித்த நர்ஸ் அஸ்ஸாமின் மற்ற எல்லா கருவுற்றிருக்கும் பெண்களைப் போலவே ஹசீனாவும் அனிமிக்காக இருப்பதாக தெரிவிக்கிறார். ஹசீனாவின் ஹீமோகுளோபின் 6.4 என்றும் சொல்கிறார். இந்தியப்பெண்களுக்கு ஒரு டெசிலிட்டருக்கு 11 கிராம் இருக்கவேண்டும். கருவுற்றிருக்கும் பெண்கள் அனிமிக்காக இருக்கும்போது குறித்த நேரத்துக்கு முன்பாக குழந்தை பிறக்கும் வாய்ப்பு மிகவும் அதிகம். அதோடு நோய்தொற்றுக் கான வாய்ப்புகளும் அதிகம். அதுவும் மருத்துவ வசதிகளெதுவும் இல்லாத இப் பெண்கள் மரணத்தின் வாயிலிலிருக்கிறார்கள்.


பேறுகாலத்தில் மருத்துவமனைக்குச் செல்வதைவிட வீட்டில் இருப்பதையே ஹசீனா விரும்புகிறார். அரசாங்க மருத்துவமனைக்குச் சென்றால் அரசாங்கத்திலிருந்து 1400 ரூபாய்கள் வருமென்றாலும் ஹசீனாவின் வீட்டிலிருந்து மருத்துவமனைக்குச் செல்வது 1500 ரூபாய்களாகும் என்றும் அதோடு மருத்துவமனைக்கும் ஆரம்பத்தில் பணம் செலுத்த வேண்டியிருக்குமென்றும் கூறுகிறார். அதோடு, பேறுகாலத்தில் ஆண் மருத்துவர்கள் தன்னை உடலில் துணியில்லாமல் பார்ப்பதை விரும்பவில்லை என்றும் கூறுகிறார்.

பெற்றோர் சொல்வதைப் போல மருத்துவ வசதியில்லாமல் வீட்டில் பிரசவித்தால் இறப்பை சந்திக்க நேரிடும் என்கிறார், நர்ஸ். ஒரு குழந்தைக்குச் சொல்வதைப் போல. “செத்தா செத்துட்டு போறேன்” என்கிறாள் ஹசீனா தனது தலையிலிருக்கும் துணியை இழுத்துவிட்டபடி. ஹசீனா வைப் போன்ற எண்ணற்ற குழந்தை மணமகள்களுக்கு வாழ்க்கை என்பது இவ்வளவு தான்.

ஆண்டுக்கு ஒரு இலட்சம் தாய்மார்களும், பத்து இலட்சம் குழந்தைகளும் கொல்லப்படும் நாட்டில் தான் விரைவில் வல்லராசகப் போகிறதென்ற கூச்சலை ஊடகங்கள் வாயிலாகவும், நடுத்தர வர்க்கதின் மூலமாகவும் கேட்டுக் கொண்டிருக்கிறோம். கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை வைத்து பெருமைப்படும் இவர்கள் மரண கண்டத்தோடு வாழ்வதற்கு சபிக்கப்பட்ட இந்த குழந்தைகளை கொசுக்களைப் போல ஒதுக்குகிறார்கள் என்று இத் துயரம் நீங்குமோ?

○


NASA
திடுக்கிட வைக்கும்
திருநள்ளாறு



சில வருடங்களுக்கு முன்பு அமெரிக்க செயற்கைகோள் ஒன்று பூமியின் குறிப்பிட்ட பகுதியை கடக்கும் போது மட்டும் 3 வினாடிகள் ஸ்தம்பித்துவிடுகிறது..

3 வினாடிகளுக்கு பிறகு வழக்கம்போல் வானில் பறக்க ஆரம்பித்து விடுகிறது. எந்தவித பழுதும் அதன் செயற்கைகோளில், அதன் கருவிகளில்ஏற்படுவதில்லை.

இந்த சம்பவம் நாசாவிற்கு அதிர்ச்சி கலந்த ஆச்சரியத்தை அளித்தது.

கிடைத்த முடிவு நாசாவை மட்டுமல்ல, உலகையே மிரள வைத்தது.

இன்று பல நாடுகள் செயற்கைகோள்களை விண்வெளிக்கு அனுப்பி வருகின்றன. அவற்றில் செல்போன் பயன்பாடு, ராணுவ பயன்பாடு, உளவு என பல்வேறு காரணங்களுக்காக பயன்படுத்தப்படுகிறது.

சில வருடங்களுக்கு முன்பு அமெரிக்க செயற்கைகோள் ஒன்று பூமியின் குறிப்பிட்ட பகுதியை கடக்கும் போது மட்டும் 3 வினாடிகள் ஸ்தம்பித்துவிடுகிறது..

3 வினாடிகளுக்கு பிறகு வழக்கம்போல் வானில் பறக்க ஆரம்பித்து விடுகிறது. எந்தவித பழுதும் அதன் செயற்கைகோளில், அதன் கருவிகளில் ஏற்படுவதில்லை. இந்த சம்பவம் நாசாவிற்கு அதிர்ச்சி கலந்த ஆச்சரியத்தை அளித்தது.

கிடைத்த முடிவு நாசாவை மட்டுமல்ல, உலகையே மிரள வைத்தது. ஆம்! எந்த ஒரு செயற்கைகோளும் பூமியில் இந்தியாவின்-தமிழ்நாடு அருகில் உள்ள புதுச்சேரி- திருநள்ளாறு ஸ்ரீ தர்ப்பநேஷ்வரர் கோவிலுக்கு மேல் நேர் உள்ள வான்பகுதியை கடக்கும் 3 வினாடிகள் மட்டும் ஸ்தம்பித்துவிடுகின்றன. திரு+ நள + ஆறு என்பது திருநள்ளாறு என்று ஆனது. இதில் "நள" எனும் சொல் நளச் சக்ரவர்த்தியை குறிக்கிறது. அவர் இக்கோவிலில் வந்து வழிபட்டு, சனி தோஷத்தை நிவர்த்தி செய்து கொண்டார் என்று சொல்லப்படுகிறது.

இதன் காரணமாக நளச் சக்ரவர்த்தியின் துயரை ஆற்றிய ஊர் என்பதால் திருநள்ளாறு என பெயர் பெற்றது. பாண்டிச்சேரியில், காரைக்கால் அருகே அமைந்துள்ள திருநள்ளாறு, நவகிரஹ ஸ்தலங்களில் ஒன்று.

சனீஸ்வர பகவானின் சக்தி வாய்ந்த திருவுருவச் சிலையைக் கொண்ட இக்கோயில்,ஸ்ரீ தர்பாரன்யேசுவரர் கோயிலின் ஒரு அங்கமாகும். ஸ்ரீ தர்பரண்யேசுவரர் கோயிலின் மூலவர் சிவபெருமான் ஆவார்.

சனி பகவான் வீற்றிருக்கும் இடத்தைப் பொறுத்து தான் பல்வேறு ராசிக்காரர்களின் இன்ப துன்ப நிலைகள் கணிக்கப்படுகிறது. அப்படி சனி பகவான் ஒரு ராசியில் இருந்து மற்றொரு ராசிக்கு இடம் மாறுவதை சனிப் பெயர்ச்சி என்று கூறுவர். அந்தப் புண்ணிய தினத்தில், பல்வேறு ஊர்களில் இருந்து வரும் பல்லாயிரக்கணக்கான மக்கள் திருநள்ளாறு வந்து பக்தியோடு வழிபட்டுச் செல்கின்றனர்.

பச்சைப் படிகம் எனும் கீர்த்தனை திருநள்ளாறில் இயற்றப்பட்டதால், தமிழ் இலக்கிய வரலாற்றிலும் இவ்வூருக்கு முக்கிய பங்கு உண்டு. மிகவும் சுத்தமாக பராமரிக்கப்படும் அமைதியான, அழகான ஊர் திருநள்ளாறு. அங்கு சென்று வழிபடும் அனைவருக்கும், நல்ல பலன்களை அள்ளித் தருவார் சனி பகவான்.

திருநள்ளாற்றிற்கு மிக சுவாரஸ்யமான வரலாறு உண்டு. பச்சைப் படிகம் என்ற கீர்த்தனைகள் மூலம் திருநள்ளாறு குறித்த வரலாற்றைத் தெரிந்து கொள்ள முடிகிறது. சைவ சமய பாரம்பரியம் கொண்ட இவ்வூர் மக்கள், ஜெயினர்களின் வருகையால் அவர்களின் சமயத்தின்பால் ஈர்க்கப்பட்டனர்.

அந்த நகரத்தை ஆண்ட ராஜாவோ இத்தகைய மாற்றத்தை விரும்பவில்லை. மாறாக, அந்த நகரத்தின் பாரம்பரிய சமயமான, சைவ சமயத்தை நிறுவ விருப்பம் கொண்டிருந்தார்.

அப்போது, சைவத் துறவியான திருஞான சம்பந்தரின் சிறப்புக்களைப் பற்றி கேள்விப்பட்ட அரசர், அவருக்கு அழைப்பு விடுத்தார். அதன் பேரில் அரசரின் அழைப்பை ஏற்று இங்கு வந்த திருஞான சம்பந்தர், அவ்வூர் அரசருக்கு நீண்ட காலமாக இருந்த உடல் கஷ்டங்களை தன் விசேஷ சக்திகளை கொண்டு குணமாக்கினார்.

இது அந்நகரம் முழுக்க பரவ ஆரம்பித்தது. அதுமட்டுமல்லாமல் திருஞான சம்பந்தர், மக்களின் துன்பங்களையும் நீக்கி மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்தார். திருஞான சம்பந்தரின் புகழ் நகரம் முழுவதும் பரவியது.

திருஞான சம்பந்தரின்பால் ஈர்க்கப்பட்டு, மக்கள் சைவ சமயத்தைத் தழுவ ஆரம்பித்தனர். இதனைக் கண்ட ஜெயின் சமயத்தினர், சம்பந்தரை போட்டிக்கு அழைத்தனர். அதில் வெற்றி பெற்ற சம்பந்தர், அங்கு மறுபடியும் சைவ சாம்ராஜ்யத்தை நிறுவ பெரும் பணியாற்றினார். இதன் தொடர்ச்சியாக, எழுந்தது தான் திருநள்ளாறு கோவில்

இரண்டரை வருடங்களுக்கு ஒரு முறை நடக்கும் சனி பெயர்ச்சியின் போது இதன் கருநீலகதிர்களின் அடர்த்தி மிகவும் அதிகமாக இருக்கும். விண்வெளியில் சுற்றி கொண்டிருக்கும் செயற்கை கோள்கள் இந்த கருநீலகதிர்கள் பாயும் பகுதிக்குள் நுழையும்போது ஸ்தம்பித்து விடுகின்றன. இந்த சம்பவத்திற்கு பிறகு நாசாவிலிருந்து பல முறை திருநள்ளாறு வந்து ஆராய்ச்சி செய்து விட்டனர் அவர்களும் சனிபகவானை கையெடுத்து கும்பிட்டு பெருமை உணர்ந்தனர். இன்று வரை விண்ணில் செயற்கைகோள்கள் திருநள்ளாறு பகுதியை கடக்கும் பொது ஸ்தம்பித்து கொண் டே இருக்கிறது.

நாம் பல செயற்கைகோள்கள் கொண்டு கண்டறியும் சனிகோளின் கதிர்வீச்சு விழும் பகுதியை நம் முன்னோர்கள் கண்டு பிடித்து அதற்கென ஒரு கோயிலையும் கட்டி , கதிர்வீசுகள் அதிகம் விழும் நாட்களையும் கணக்கிட்டு அதற்க்கான நாளை சனிபெயர்ச்சி என்று அறிவிக்கும் திறமையை, நம்மால் நினைத்துக்கூட பார்க்க முடியாத ஒரு தொலைநோக்கு பார்வை கொண்ட நம் முன்னோர்களை நினைத்து பிரமிக்காமல் இருக்க முடியாது. ஆனால் சிலர் இது பொய் செய்தி என்கின்றனர்.எது என்னவோ? நீங்கள் ஏதாவது சிவன் கோவிலுக்கு சென்றால் அங்கே நவகிரகங்களை நன்றாக கவனியுங்கள். அந்த சிலைகளின்மேல் கட்டப்பட்டுள்ள துணிகளையும் நன்றாய் உற்று பாருங்கள்!! உங்கள் அறிவியல் அறிவையும் கொஞ்சம் தட்டிவிடுங்கள்!!

எந்த கோள் எந்த நிறத்தில் இருக்கும் என்பதை நம் முன்னோர்கள் கட்டிவைத்திருக்கும் அந்த துணிகளில் கண்டறியுங்கள், பிரமித்து போவீர்கள் பெரியோர்களின் அறிவாற்றலை நினைத்து, இந்தஅறிவியலின் அதிசயத்தை அனைத்து தலைமுறையும் அறியவேண்டும்.
நம் முன்னோர்கள் போட்ட புதிருக்கு இன்னும் விடை தெரியாமல் அலைந்து கொண்டிருக்கின்றோம்.. அறிவியல் வளர்ச்சியோடு.!

உங்களுக்கும் வாய்ப்பும் வசதியும் வந்தால் ஒரு முறை திருநள்ளாறு சென்று தரிசித்து வாருங்கள் அதன்பின் நீடித்த துன்பம் அகலும்

# சிரிக்க சிரிக்க சிரிப்பு

விடியற்காலை 3 மணி. மழை வேறு பெய்து கொண்டிருந்தது. ஒரு வீட்டில் கணவன் மனைவி தூங்கிக் கொண்டிருந்தனர். அப்போது கதவு தட்டும் சத்தம் கேட்டது.
கணவன் மட்டும் எழுந்து போனான். கதவை திறந்தால் அங்கே ஒரு குடிகாரர் நின்று கொண்டிருந்தார்.
"சார் ஒரு உதவி.. கொஞ்ச அங்க வந்து தள்ளி விட முடியுமா?" என்று அந்த குடிகாரர் கேட்டார்.
கணவனோ "முடியவே முடியாது ஏம்பா விடியகாலை 3 மணிக்கு தொந்தரவு செய்யறே"ன்னு சொல்லிட்டுகதவை சாத்திட்டு படுக்கப் போய் விட்டான்.
"யாரது?" என்று மனைவி கேட்டாள்.
"எவனோ ஒரு குடிகாரன், வந்து காரோ எதையோ தள்ளி விட முடியுமான்னு கேட்கிறான்"
"நீங்க உதவி செஞ்சீங்களா?"
"இல்லை, காலைல 3 மணி, மழை வேற பெய்யுது எவன் போவான்?"
"பார்த்தீங்களா?
3 மாசம் முன்னாடி நம்ம கார் ரிப்பேராகி நடு ரோட்ல நின்னப்ப இரண்டு பேர் நமக்கு உதவி செஞ்சாங்களே? இப்ப நீங்க அது மாதிரி உதவி செய்யலன்னா எப்படி? கடவுள் குடிகாரர்களையும் நேசிப்பார்"
கணவன் எந்திரிச்சான், ட்ரஸ் பண்ணிக்கிட்டு மழையில் நனைஞ்சுகிட்டே வெளியே போனான்.
இருட்டுல, மழையில் சரியா தெரியாததால சத்தமா கேட்டான்.
"ஹலோ, நீங்க இன்னும் இருக்கீங்களா?"
"ஆமா சார்"
"ஏதோ தள்ளி விடணும்னு சொன்னீங்களே, இப்ப செய்யலாமா?"
"ஆமா சார் வந்து கொஞ்சம் தள்ளிவிட்டீங்கன்னா நல்லா இருக்கும்"
"எங்கே இருக்கீங்க"
"இங்கதான் ஊஞ்சல் மேல உட்கார்ந்திருக்கேன் வாங்க வந்து தள்ளிவிடுங்க

ஒரு இளைஞன் அவசரமா மெடிக்கல் ஷாப்புக்கு போனான், "இந்த மாதிரி அதாவது"
"அட ஒண்ணுமில்லப்பா தயங்காம சொல்லு"
"அது நானும் ஒரு பொண்ணும் காதலிக்கிறோம்"
"நல்ல விஷயம்.."
"இல்ல வர்ற ஞாயித்துக் கிழமை என்னை அவ வீட்டுக்கு கூப்பிட்டுருக்கா"
"ஓ கலக்கு"
"அதாவது அவங்க வீட்ல எல்லாரும் பார்ட்டிக்கு போய்டுவாங்களாம்"
ஃபார்மசிஸ்ட் குறும்பா,"ஹேய் அப்டியா? "
"இல்ல.. எனக்கு இது தான் முதல் தடவ"
"ஓ அது தான் உன் பிரச்னையா?"அப்டின்னு ஆரம்பிச்சு சகலமும் சொல்லி தர வேண்டியதை தந்து அட்வைஸ் பண்ணி அனுப்புறார்.
அந்தப் பொண்ணு வீட்டுக்கு போறான், எல்லோர்கிட்டயும் நல்லா பேசறான். அவங்கம்மா,"சரிப்பா நாங்க சர்ச்சுக்கு போறோம்,நீங்க பேசிட்டு இருங்க என்றார்

அவன் அவசரமா "இல்ல நானும் வர்றேன்"அப்டின்னான்.
அந்தப் பொண்ணு பதட்டமா ஆனா அவன் காதுல கிசுகிசுப்பா,"யேய் என்ன சொல்ற நீ இவ்ளோ கடவுள் பக்தி உள்ளவன்னு என்கிட்ட சொல்லவேயில்லயே"

அவன் உடனே சொன்னான்,"உங்கப்பா ஃபார்மஸிஸ்ட்னு நீ மட்டும் சொன்னியா?"



ஒரு காட்டில சிங்க ராஜாவின் ஆட்சியில் எல்லா மிருகங்களும் ஒற்றுமையா வசித்து வந்துச்சாம். தினமும் ஒரே மாதிரி வாழ்க்கை இருந்ததால மிருகங்களெல்லாம் சலிச்சுப் போய் ஒரு விரக்தியுடன் இருந்துச்சாம். இதைக் கவனிச்ச சிங்க ராஜா எல்லா மிருகங்களும் சந்தோசமாக வாழ என்ன வழி செய்யலாம் என யோசிச்சு அனைத்து மிருகங்களையும் ஒன்றா கூட்டிச்சாம். மிருகங்களைப் பார்த்து சிங்கம் எனதருமை சகோதரர்களே இன்று முதல் நாம் எல்லாரும் மகிழ்ச்சியுடனும் சந்தோசமாகவும் இருக்க வேண்டும் . அது மட்டுமில்ல மற்றவர்களையும் சந்தோசமாக வைத்திருக்க வேண்டும். அப்பிடி இருப்பவர்கள் மட்டுமே இந்தக் காட்டில இருக்கலாம். அதுக்கு ஆரம்பமாக இன்று ஒவ்வொரு மிருகங்களும் தனக்குத் தெரிந்த நல்ல ஜோக் ஒன்று சொல்ல வேண்டும். ஆனா நீங்க சொல்லும் ஜோக்குக்கு யாராவது ஒரு மிருகமாவது சிரிக்காம இருந்தா ஜோக் சொன்ன மிருகத்தை நான் அடிச்சு சாகக் கொன்று விடுவேன். எனவே ஒவ்வொருவராக வந்து ஜோக் சொல்லுங்க என்று சொல்லிச்சு.

முதல்ல குரங்கை ஜோக் சொல்ல சிங்கம் அழைச்சுது. பயந்து கொண்டே வந்த குரங்கு மிகவும் அருமையான ஜோக் சொல்லிச்சு. எல்லா மிருகங்களும் விழுந்து விழுந்து சிரித்தன.சிங்கமும் சிரிச்சுக் கொண்டே நிமிர்ந்து பார்க்க ஆமை மட்டும் சிரிக்காம உம்முனு இருந்திச்சு. என்ன செய்யிறது. ஒரு மிருகம் சிரிக்காதபடியால சிங்கம் குரங்கை அடிச்சுகொன்றது.

பின்னர் கரடியை ஜோக் சொல்ல சிங்கம் அழைச்சுது. கரடியும் வந்து குரங்கைவிட நல்ல ஜோக் ஒன்று சொல்லிச்சு. அதுக்கும் சிங்கம் உட்பட எல்லா மிருகங்களும் சிரிக்க ஆமை மட்டும் ஊகூம்...... சிரிக்கவேயில்லை. கரடியும் செத்திச்சு. அடுத்தது யானை அதுக்கும் அப்பிடியே நடந்துது.ஆமை சிரிக்கவேயில்லை யானையையும் சிங்கம் அடிச்சு கொன்டுடிச்சு

பிறகு கழுதை வந்திச்சு வந்து "ஒரு ஊரில ..." என்று ஜோக் சொல்ல ஆரம்பிக்கு முன்னரே ஆமை விழுந்து விழுந்து சிரிக்கத் தொடங்கிச்சு.சிங்கத்துக்கும் மத்த எல்லா மிருகங்களுக்கும் ஆச்சரியமும் கோவமும் வந்திச்சு.

சிங்கம் ஆமையிடம் கேட்டிச்சு " இவ்வளவு நேரமும் சிரிக்காம இருந்திட்டு இப்ப கழுதை ஜோக் சொல்லவே ஆரம்பிக்க இல்ல ஆனா நீ இப்படி விழுந்து விழுந்து சிரிக்கிறியே".

அதுக்கு ஆமை சொல்லிச்சாம்

"இல்ல குரங்கு சொன்ன ஜோக்குக்கு சிரிப்பு வந்திச்சு அதுதான் சிரிச்சேன்.

●

நாராயணசாமி போலீஸ் வேலைக்கு நடந்த நேர்முகத் தேர்வில் கலந்து கொண்டார்.
மகாத்மா காந்தியை சுட்டுக் கொன்றது யார் தெரியுமா? என்று அவரிடம் கேட்கப்பட்டது.
உடனே அவர் தேர்வு அதிகாரிகளிடம் எனக்கு கொஞ்சம் கால அவகாசம் வேண்டும் என்றார்.
அதிகாரியும் சிரித்துக் கொண்டே சரி ஒரு வாரம் தருகிறோம் விடையுடன் வா என்றார். அவர் வீடு திரும்பினார்.
வேலை கிடைத்து விட்டதா? என்று அவர் மனைவி கேட்டாள்.
அவர் சொன்னார் அநேகமாக வேலை கிடைத்த மாதிரிதான்.
இல்லாவிட்டால் நேர்முகத் தேர்வின் போதே கண்டுபிடிக்க எனக்கு ஒரு கேசைத் தருவார்களா?
7 நாட்களுக்குள் அந்தக் கொலையாளியை நான் கண்டு பிடிக்க வேண்டும்.

●



# அழிவிற்கு வழிவகுக்கும் அணு



**முன்னாள் சோவியத் ஒன்றியம் மறைத்து வைத்த மிகமோசமான ரகசியங்களில் ஒன்று அது. எழுபது வருடங்களில் இரண்டு அணுஉலை விபத்துக்கள்... 23,000 சதுரகிலோமீட்டர்கள் பரப்பிற்கு ப்ளுட்டோனியம் பரவி 1,24,000 மனிதஉயிர்கள் காலத்திற்கும் முழுவதுமாக பாதிக்கப்பட்டு....**

36,00,000 மக்கள் தொகை கொண்ட ரஷியாவின் செல்யாபின்ஸ்க் மாகாணத்திற்கு வாருங்கள். இந்த செல்யாபின்ஸ்க்கிலிருந்து 80 கி.மீ. தூரத்தில் 1940களின் இறுதியில் மாயக் என்ற அணு ஆயுத கட்டுமானம் நிறுவப்பட்டது. 1990 வரை இந்த அணுஆயுதகட்டமைப்பு இந்தப் பகுதியை அணுமற்றும் இரசாயன கழிவுகளால் தொடர்ச்சியாக கன்னாபின்னாவென்று சீரழித்தது. ஆனால் அதுவல்லவிஷயம்.

1957இல் இந்த அணுஆயுத தொழிற்சாலையின் குளிரூட்டும் பகுதிசெயலிழந்தது. இதனால். கதிரியக்க மூலப்பொருள் சேமிப்புகலன் வெடித்துமிக மோசமான அணு விபத்து சம்பவித்தது. அந்த அணுஆயுத மையத்தை சுற்றி 23000 சதுரகிலோமீட்டர் பரப்பளவிற்கு கதிர்வீச்சுப் பரவியது. சிறிது நேரத்திலேயே உருவான கதிரியக்க மேகம் செல்யாபின்ஸ்க். ச்வேர்ட்லோவ்ச்க் மற்றும் டியுமென் மாகாணங்களுக்கு மேல் பரவிபொழிந்தது.


நதிக்கரையில் வாழ்ந்துவந்த 1,24,000 அப்பாவி மக்கள் கடுமையான அணுகதிர்வீச்சு பாதிப்பிற்கு உள்ளானார்கள். செர்னோபில் அணுவிபத்து வெளியிட்டதை விட கிட்டத்தட்ட இருமடங்குஅணுக் கதிர்வீச்சை இந்த அணு கதிர்வீச்சு விபத்து வெளியிட்டது.

பிறகு.... அந்த இடம் உச்சபட்சபாதுகாப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுசுமார் 10,700 மக்கள் சத்தமில்லாமல்



# உலைகள்





வெளியேற்றப்பட்டனர்.

இந்தஅணுகதிர் விபத்திற்குப் பிறகு உடனடியாக வியாதிகளும்,மரணங்களும் அதிகரிக்கத்துவங்கின. பிறப்பு குறைபாடுகள், ஜீன் பாதிப்புகள்,ஆண் பெண் மலட்டுத்தன்மை மற்றும் கேன்சர் எண்ணிக்கைகள் எகிறின. 1950 லிருந்து வெண்குஷ்டம் 41 சதவிகிதம் அதிகரித்தது. அந்தபகுதியின் நூறு கோடி கலன்கள் அளவுள்ள நிலத்தடிநீர் அணுக்கழிவு களால் மாசுபடுத்தப்பட்டுள்ளன என்று விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பகுதியின் மக்கள் தொகையில் குழந்தை பேற்றுக்குத் தகுதியான மக்களில் சரிபாதி மலட்டுத் தன்மை யால் பாதிக்கப்பட்டுள்ளனர். 1990இல் இந்த பகுதியை ஆய்வுசெய்த ஆராய்ச்சியாளர்கள், ஒரு மனிதனை ஒரே மணி நேரத்தில் கொன்று விடக்கூடிய அளவிற்கு ஆண்டு கதிர்வீச்சு நிரம்பியுள்ளதாக தெரிவித்தனர்.

இன்று...

இந்தப் பகுதியில் உள்ளஏரிகள் அனைத்தும் வறண்டுவிட்டன. அங்கு நீங்கள் ஒருமணிநேரம் விசிட் செய்தால் இரண்டுநாட்கள் தொடர் தலைவலியால் அவதிப்பட நேரிடும். அந்தப் பகுதியில் காணப்படும் மீன்களில் 17.000 பெகியுரல் என்ற அளவிற்கும் காய்கனிகளில் 8.000 பெகியுரல் என்றஅளவிலும் அதிர்ச்சிதரத்தக்கஅளவில் அதிககதிர்வீச்சு காணப்படுவதாக 1996 இல் ஒரு ஜேர்மன் ஆய்வுதெரிவிக்கிறது.

இவ்வித விஷத்தன்மைகளிலிருந்து இந்தப் பகுதியை தூய்மைபடுத்தும் சர்வதேச முயற்ச்சிகள் துவங்கிவிட்டன.

அணுஉலைகள் மனிதஉயிருக்கு உலைவைக்கும் என்பதில் ஐய்யம் ஏதும் இல்லை என்பதற்கு இந்த நிகழ்வு ஒரு எடுத்துகாட்டு. எமது பிரதேசத்தில் சுன்னாகம் மின் நிலையத்தில் பயன்படுத்தப்பட்ட கழிவொயிலே பாரிய பிரச்சனையை உண்டு பண்ணும் போது நுரைச்சோலை மின் நிலையம் எத்தகைய பாதிப்புக்களை ஏற்படுத்தப் போகின்றதோ?




**உலகின்** அனைத்து இன்பங்களையும் துய்த்துக் கொண்டு ஏக போகமாக வாழ்ந்து வரும் நமக்கு இதே உலகில் வாழ்க்கையைத் தொலைத்துவிட்டு வாழத் தகுதியில்லாத பகுதிகளில் வாழ்ந்து வரும் ஏழை எளிய மக்களைப் பற்றிச் சிந்திக்க நேரம் இருப்பதில்லை அல்லவா. ஆனால் அவர்களுக்கும் ஒரு வாழ்க்கை உண்டு, ஒரு கனவு உண்டு ஆனால் அதற்கான வாய்ப்புக்கள் மட்டும் கிடைக்கப் பெறுவதில்லை என்பதை நாம் நினைவில் கொள்வதில்லை. அவ்வாறான தாழ்நிலையில் இருந்து மேலோங்கி வந்துவிடுவது என்பது எளிதான காரியம் இல்லை, இருந்த போதும் போராடும் குணமும், விடா முயற்சியும் எல்லாவற்றுக்கும் மேலாகத் தன்னம்பிக்கையும் கொண்டவர்கள் தாழ்ந்துவிடுவதில்லை. முயற்சி திருவினை ஆக்கும் என வள்ளுவனின் வாக்கை நாம் இக் கணத்தில் நினைவில் கொள்ள வேண்டும். அத்தகைய முயற்சியைப் பெற்று புகழோடு தோன்றியவர் தான் 16 வயதே ஆன பியோனா முடேசி (Phiona Mutesi) என்ற இளம் பெண்.



உகாண்டாவின் மிகவும் பின் தங்கிய பகுதியில் அமைந்திருக்கும் சேரிப் புறமே கத்வே ஆகும். அங்குத் தான் வசித்து வருகின்றார் பியோனா முடேசி.

# வேதனைகளே சாதனைகள்



உலகின் பின் தங்கிய கண்டம் ஆபிரிக்கா ஆகும், அந்த ஆப்பிரிக்காவிலேயே பின்தங்கிய நாடு உகாண்டா, அந்த உகாண்டாவிலேயே பின் தங்கிய பகுதி கத்வே ஆகும். அங்கு வசிப்போரிலேயே பின் தங்கியவர்கள் அங்கு வாழும் பெண்கள், அதிலும் மேற்கூரை இல்லாமல் தெருவோரத்தில் வசிப்பது கொடுமையிலும் கொடுமை என்பேன். அத்தகைய பின் புலத்தில் இருந்து வந்தவர் தான் பியோனா முடேசி. இன்று உகாண்டாவின் செஸ் விளையாட்டில் நம்பிக்கை நட்சத்திரமாக மிளிர்ந்து

கொண்டிருக்கின்றார் அவர்.

செஸ் என்ற ஒரு விளையாட்டு இருப்பதே அவளுக்குத் தெரியாதாம். செஸ் விளையாட்டு அறிமுகமாக முன் தெருவில் தான் அவள் வசித்து வந்தாள் எனக் உருக்கத் துடன் கூறினாள். " தெருவில் சாப்பிடக் கூட ஒன்றுமே கிடைக்காது" என்றார் அவர்.



இந்த நிலையில் 2005-ம் ஆண்டுப் பசிக் கொடுமையைத் தாங்க முடியாமல் ஒரு பொதுத் தொண்டு விடுதிக்கு வந்தடைகின் றார் பியோனா. அந்த விடுதியை நடத்தி வருபவர் 28 வயதானா ராபர்ட் கடேண்டே என்பவர். அவர் உள்ளூர் வாசிகளுக்குச் செஸ் விளையாடக் கற்றுக் கொடுத்தும் வந்தார். பசித்தவனுக்குச் செஸ் விளையாட ஏது நேரமும், மனமும். ஆகவே அவரின் தொண்டு நிறுவனம் ஒருவேளை கஞ்சியையும் சேர்த்துக் கொடுத்தது. ஆகவே உகாண்டாவின் பல பகுதிகளில் இருந்து பசியால் துடிக்கும் பல சிறார்கள் இங்கு வந்து கஞ்சிக்கு ஆகவாவது செஸ் விளையாடுவது வழக்கம். அப்படித் தான் வந்து சேர்ந்தார் பியோனாவும்.



உகாண்டா என்பது ஆபிரிக்காவிலேயே மிகவும் மதவாதம் நிறைந்த நாடு ஆகும். அனைத்து இயற்கை வளங்களும் இருந்த போதும் வறுமையும், சீர்குலைந்த வாழ்க்கையும் அந்த நாட்டைப் புரட்டிப் போட்டு இருந்தது.

பெரும்பாலான இளம் பெண்கள் பருவம் அடைந்ததுமே மணம் முடிக்கப்படுவார்கள், அல்லது பலாத்காரம் செய்யப்பட்டு விடுவார்கள். பல பெண்கள் தங்கள் பதின்ம வயதைக் கூடக் கடக்காத நிலையில் தாய்மை அடைந்துவிடுவதும், வறுமையில் வாடுவதும் அங்குக் கண்கூடான ஒன்று.

அது மட்டுமில்லாமல் தொடரும் தீவிரவாதம், ஆள் கடத்தல்கள், விபச்சாரங்கள், நோய்கள், விவசாயம் மற்றும் தொழில்கள் படுத்துவிட்ட நிலை என எங்குத் திரும்பினாலும் துன்பமே

மிஞ்சியது. அத்தகைய பலருக்கு ஆறுதலாக இருந்தது ஒரு வேளை கஞ்சியும் அதற்காகச் செஸ் விளையடுவதுமே.

இந்த நிலையிலேயே செஸ் விளையாட்டை மிகவும் நேசிக்கத் தொடங்கினாள் பியோனா, அவளுக்குச் செஸ் விளையாட்டின் அடிப்படை விதிகளைக் கற்றுக் கொடுத்தார் ராபர்ட் முடேண்டே. ஆனால் தீரா ஆர்வமும், மிளிரும் கண்களில் செஸ் மீதான ஆசையும் பியோனாவை மனம் தளரவிடவில்லை.

அவள் தினமும் ஆறு கி.மீ.க்கள் செஸ் விளையாடுவதற்காக நடந்தே வருவாள் என ESPN கூறுகின்றது.

இன்று அந்த ஊர்களில் இருப்போரை விட நன்கு செஸ் விளையாடக் கூடியவள் பியோனா தான். "" எதிராளியினைத் தனது மூவ்-களில் தாக்கி செஸ் கட்டைகளை நகர்த்த முடியாமல் திணறடிப்பதில் அவள் வல்லவள்"" எனக் கூறுகின்றார் ராபர்ட்.

தனது ஆசானான ராபர்ட்டைத் தோற்கடிக்கும் அளவுக்கு வளர்ச்சிக் கண்டாள். இன்று ஒட்டு மொத்த ஆபிரிக்காவிலேயே சிறந்த செஸ் வீராங்கனையாக மாறியுள்ளார் பியோனா. இளம் வயதிலேயே ஆபிரிக்கன் செஸ் சாம்பியன்சிப்பைத் தட்டிச் சென்ற பெருமை இவளுக்கே சேர்ந்துள்ளது.

இவளின் செஸ் திறமையால் விட்டுப் போன தனது கல்வியைத் தொடரவும் பல வாய்ப்புக்களும், உதவிகளும் குவிய தொடங்கியுள்ளது. எதிர்க்காலத்தில் தான் ஒரு மருத்துவர் ஆகவே விரும்புவதாக CNN-க்கு அளித்த பேட்டி ஒன்றில் கூறியுள்ளாள் அவள்.

பன்னாட்டுப் போட்டிகளில் உகாண்டா சார்பாகக் கலந்துக் கொண்டும் வருகின்றாள். மேட்டுக் குடிகளின் செல்வச் செழிப்பில் தலைசிறந்த பயிற்சியை எல்லாம் பெற்று, சுக போக வாழ்க்கைப் பின்னணியில் எவ்விதக் கவலையும் இன்றிப் போட்டிகளில் கலந்து கொள்ளும் பல நாட்டவர்களோடு அவள் போடும் போட்டி மிகவும் சவாலானது என்ற போதும், தனது விடா முயற்சியால் அனைவரோடும், பல சமயங்களில் தனது வயதை விடவும் இரு மடங்கு மூத்தவர்களோடும் சரிநிகராகப் போட்டி போடுகின்றார் பியோனா.

இருந்த போதும் அவருக்கு உலகச் செஸ் ஜாம்பவான்களோடு மோத மேலும் பல ஆழ்ந்த பயிற்சியும், உதவியும் தேவைப் படுகின்றது. அவை கிட்டும் பட்சத்தில் அவள் நிச்சயம் உலகின் தலை சிறந்த செஸ் வீராங்கணையாக வலம் வருவாள் என்பதில் ஐயமில்லை.

இவளின் வாழ்க்கைக் கதையைக் கேட்ட டிம் குரோதர்ஸ் என்பவர் "" The Queen of Katwe ""( கத்வேயின் அரசி ) என்ற புத்தகத்தை எழுதியுள்ளார். சிறப்பான விடயம் என்ன என்றால் இவளது வாழ்க்கைச் சரிதம் ஹாலிவுட் திரைப்படமாகவும் எடுக்கப்படவுள்ளது.

அவள் மிகப் பெரிய போட்டியில் வெற்றிப் பெற்ற போதும், அவளுக்கு அது என்னவென்றே

தெரியாமல் இருந்தது. அந்த வெற்றியால் அவளுக்கு என்னக் கிடைக்கும் என்றும் தெரியாமல் இருந்தது, எப்போதும் விளையாடுவது போலவே விளையாடினாள். மிகப்பெரிய ஒலிம்பியாட் போட்டியில் தான் கலந்துக் கொள்ள தகுதி பெற்றது கூட அவளுக்கு தெரியவில்லை. சொல்லப் போனால் ஒலிம்பியாட் என்றால் என்னவென்று கூட தெரியாது. இதில் வெற்றிப் பெற்றுவிட்டதால் சில மாதங்களில் அவள் மத்திய ரசியாவில் இருக்கும் காண்டி-மான்சியிஸ்கில் நடைபெறும் போட்டியில் கலந்துக் கொள்ளப் போகின்றாள் என்பதைக் கூட அவள் அறியவில்லை. ரசியா எங்குள்ளது என்று அவளுக்குத் தெரியாது. அவளுக்கு அவை எல்லாம் தெரிய வரும் போது, அவள் கேட்ட ஒரே கேள்வி : "" அங்கு குளிராக இருக்குமோ "" என்பது மட்டுமே. - டிம் குரோதர்ஸ், ஆசிரியர் "" கத்வேயின் அரசி ""

எய்ட்ஸ் நோயால் தந்தையைப் பறிகொடுத்துவிட்டு, போதிய வசதி இல்லாததால் தாயாரால் பள்ளிக்கும் அனுப்ப முடியவில்லை என்பதால் கல்வியையும் தொலைத்துவிட்டு, சாப்பிட கூட வசதி இல்லாத நிலையில் தெருவில் சுற்றித் திரிந்த அவளுக்கு ஒரு விளையாட்டு புதிய வாழ்க்கையையும், அங்கீகாரத்தையும் கொடுத்துள்ளது என்பதை அறியும் சோர்வுற்றுக் கிடக்கும் நாம் எல்லாம் எம்மாத்திரம்.

**ஞானம் பெற விரும்பிய ஒருவன் இறைவனிடம் சென்று ஞானம் பெற வழி கேட்டான்.**

**இறைவன் சொன்னார்,""அப்பா,இப்போது வெயில் மிக அதிகமாக இருப்பதால் தாகம் எடுக்கிறது எனக்கு முதலில் நீ கொஞ்சம் தண்ணீர் கொண்டு வா,""**

**அவனும் ஓடிச் சென்று முதலில் தென்பட்ட வீட்டின் கதவைத் தட்டினான்.ஒரு அழகிய இளம்பெண் கதவைத் திறந்தாள்.அவளைப் பார்த்தவுடன் அவனுக்கு அந்தப்பெண் மீது காதல் பிறந்தது.அந்தப் பெண்ணும் சம்மதிக்கவே அவளைத் திருமணம் செய்து கொண்டு நான்கு பிள்ளைகளையும் பெற்றான்.**

**ஒரு நாள் கடுமையான மழை பெய்தது.எங்கு பார்த்தாலும் தண்ணீர்.வீடுகள் அடித்து செல்லப்பட்டன.அவனும் தன் மனைவியையும் குழந்தைகளையும் கையில் பிடித்துக்கொண்டு சென்றான் அப்படியிருந்தும் அவர்களைத் தண்ணீர் இழுத்துச் சென்று விட்டது.**




**அடுத்து அவனையும் தண்ணீர் இழுத்தபோது, ""கடவுளே,என்னைக் காப்பாற்று,"" என்று கத்தினான்.**

**அப்போது இறைவன் அவனிடம் கேட்டார்," "அப்பா,தாகத்துக்கு தண்ணீர் கேட்டேனே,என்ன ஆயிற்று?""**

# அடக்கம் என்பது ஒரு அணிகலன்

சர்வேஸ்வரா
உதவிப் பதிவாளர்
மருத்துவபீடம், யாழ்ப்பாணம்

**முரண்பாடுகள்** அடிப்படையில் நன்மை தரத்தக்கனவாக இருந்தபோதும் நாம் சந்திக்கும் முரண்பாடுகள் பல அத்தகைய வகையினதா கருப்பதில்லை. பெரும்பாலான முரண்பாடுகள் தீமை பயப்பனவாகவும் முடிவற்று தொடர்பனவாகவுமே இருக்கின்றன. மறைத் தன்மையான முரண்பாடுகள் எழுவதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. விட்டுக் கொடுப்பின்மை, புரிந்துணர்வின்மை, போட்டி பொறாமையான மனப்பாங்கு, அடக்கமின்மை, பணிவின்மை, கீழ்படிவின்மை, திறனின்மை, சகிப்புத்தன்மையின்மை என பல்வேறு காரணங்களின் அடிப்படையில் முரண்பாடுகள் கட்டியெழுப்பப்படுகின்றன.


இக் கட்டுரையானது பாடசாலை மாணவர்களை மையப்படுத்தி முரண்பாட்டை தோற்றுவிக்கும் காரணிகளில் ஒன்றான அடக்கமின்மை மற்றும் பணிவின்மை என்பவை குறித்து ஆராய்வதாக அமைகின்றது.

"அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை ஆரிருள் உய்த்துவிடும்" என்பது பொய்யாமொழிப் புலவர் வள்ளுவரின் வாய்மொழியாகும். தெய்வப் புலவர் வள்ளுவப் பெருமான் அடக்கமுடமையை தன் திருக்குறளில் ஒரு அதிகாரமாக்கியுள்ளமையிலிருந்தே அடக்கமுடமையினதும் பணிவினதும் முக்கியத்துவத்தை நாம் உணர்ந்து கொள்ளக்கூடியதாகவுள்ளது.


இதுபோன்று தமிழ்க்கிழவி எங்கள் ஔவை "அடக்கம் உடையார் அறிவிலர் என்றெண்ணிக் கடக்கக் கருதவும் வேண்டா"என்றாள் தன் மூதுரையில். இதைவிட நம் முன்னோர்கள் தங்கள் வாய்மொழியாக பழமொழியில் நிறைகுடம் தழும்பாது குறைகூடம் தழும்பும் என்றும் எமக்குப் போதித்துச் சொன்றுள்ளார்கள். இவ்வாறு பல பெரியவர்கள் அடக்கத்தின் உயர்வையும் அடங்காமையால் கிடைக்கும் தீமைகளையும் அடுக்கடுக்காக சொல்லிப்போயுள்ளனர்.

கல்வியும் செல்வமும் அறிவும் அழகும் வீரமும் வித்தையும் எம்மிடம் வளர வளர நாம் பணிவும் அடக்கமும் உள்ளவர்களாக வாழப்பழக வேண்டும். மாறாக அற்ப அறிவும் சொற்ப செல்வமும் கிடைத்தவுடன் மற்றவர்களை மதியாமலும் உறவுகளைப் பேணாமலும் பெரியவர்களை கனம் பண்ணாமலும் நடந்து

கொள்வோமாயின் நாம் பெற்ற செல்வம் நிலைக்காது. கற்ற கல்வி பயன்தாரது. பெற்ற வித்தைகள் விலை போகாது.




உலகை தங்கள் அறிவாலும் ஆளுமையாலும் ஆற்றலாலும் திறனாலும் மாற்றிப்போட்ட பல மாமனிதர்கள் அடக்கத்தையும் பணிவையும் தங்கள் வாழ்நாளில் கடைப்பிடித்தமையால் தான் மறைந்தும் வாழும் மகத்துவம் மிக்க மனிதர்களாக மக்கள் மனங்களில் நிலைத்து நிற்கின்றார்கள். மகாத்மா காந்தி ஆபிரகாம் லிங்கன் நெல்சன் மண்டேலா மாட்டின் லூதர் கிங் போன்ற உலகை மாற்றிய பல தலைவர்கள் அடக்கமிக்க



மனிதர்களாக திகழ்ந்தமையினாலேயே அவர்கள் அடக்கம் செய்யப்பட்ட பின்னரும் அவர்கள் புகழ் அடங்காது வளர்ந்து கொண்டே செல்கின்றது.

இந்திய தேசத்தின் அடிமுனையில் அடிப்படை வசதிகள் அற்ற ஒரு கிராமத்தில் பிறந்து பொருளாதார நெருக்கடிகள் பலவற்றை சந்திந்து தடைகள் பல தாண்டி ஈற்றில் பாரத நாட்டின் ஜனாதிபதியாக நிமிர்ந்து நின்ற அணு விஞ்ஞானி அப்துல் கலாம் அவர்கள் வாழும் மனிதர்களுள் அடக்கமிக்க மனிதர்களுக்கு மிகச்சிறந்த



உதாரணமாவார். ஆகாயவெளியில் சிறகடித்துப் பறக்கும் ஆற்றல் பெற்ற மனிதராக மகுடம் சூட்டப்படும் அப்துல் கலாம் எளிமையே தனது அணிகலனாக பொறுமையே தனது நெறியாக பணிவே தனது பாதையாக வாழ்ந்தமையால் தான் இன்று இந்திய தேசத்து மக்களுக்கு மட்டுமன்றி உலகின் பல தேசத்து இளைஞர்களுக்கும் வழிகாட்டியாக உதாரண புருசராகத் திகழ்கின்றார்.

வயல்களில் பயிரிடப்பட்ட நெற்கதிர்களைப் பாருங்கள்! கதிரிலே நெல்மணி இல்லையானால் அது நிமிர்ந்து நிற்கும் அதைப் பதர் என்று உழவர் தூற்றி ஒதுக்கி விடுவர். ஆனால் கதிரிலே நெல்மணி இருக்குமானால் கதிர் வளைந்து தாழும். எல்லோரும் அதைப் போற்றிப் பாதுகாப்பர்.எனவே பணிவில் தான் என்றும் பெறுமதியும் பெருமையும் உள்ளது.

நேராக உள்ள மூங்கில்கள் பாடை கட்டப் பயன்பட்டு பிணத்தைச் சுமக்க,வளைந்த மூங்கிலோ பல்லக்காகிப் பெரியவர்களைச் சுமக்கும். அதனால் தான் வள்ளுவர் “பணியுமாம் என்றும் பெருமை“ என்றார்.

நாம் சில மனிதர்கள் அதிகம் பேசாது பொறுமையோடு இருக்கும் போது அவர்களிடம் எதுவும் இல்லையென்று எள்ளி நகையாடுவது உண்டு. அறிவாளிகள் அதிகம் பேசாது அடக்கத்துடனேயே இருப்பார்கள். தேவையேற்படும் போது அவர்கள் சிந்தும் ஒவ்வொரு வார்த்தைகளும் ஆயிரம் அர்த்தங்கள் மிக்கதாகவும் பல பயன்கள் விளைவிப்பதாகவும் அமைந்துவிடும்.

மாணவர்கள் தமது ஆசிரியர்களுக்கு மரியாதை செய்து அவர்கள் வார்த்தைகளை சிரமேற்கொண்டு செயலாற்றும் பணிவையும் அறிவு வளர வளர ஆற்றல் பெருக பெருக அடக்கமாயிருக்கும் பண்பையும் வளர்த்துக்கொள்ள வேண்டும். மாறாக சின்னச் சின்ன வெற்றிகளை பெரிதாக நினைத்து தோற்றவர்களைப் பார்த்து எள்ளி நகையாடி ஏளனம் செய்தால் இறுதியில் வாழ்க்கையில் நாம் தோற்றுவிடுவோம். முயலும் ஆமையும் ஓடிய பந்தயத்தில் பாயும் முயலை ஆமை வெற்றி கொண்டதன் இரகசியமே அடக்கத்தின் அடிப்படையிலேயே.

தற்பெருமையும் வித்துவச் செருக்கும் எம் தலைகளில் சுமையாக ஏறும் போது எம்மால் நிம்மதியாக வாழ முடியாது. சுற்றியிருக்கும் மனிதர்கள் எல்லோருடனும் சகஜமாகவும் சந்தோசமாகவும் ஏற்றத்தாழ்வின்றி பழகும் போது வாழ்க்கை வசந்தமாகும். பெரியவர்களின் சொற்களுக்கும் அவர்களின் அனுபவ வழிகாட்டல்களுக்கும் செவிகொடுக்கும் போது விலைமதிக்க முடியாத வெற்றிகள் எமது வசமாகும்.

நமது ஊர்வழக்கில் ஆமை ஆயிரம் முட்டை போட்டுவிட்டு அமைதியாகவிருக்கும் கோழி ஒரு முட்டை போட்டுவிட்டு கொக்கரிக்கும் எனக்கூறுவதும் அடக்கமுடமைக்கு எடுத்துக்காட்டான முதுமொழியாகும். அடக்கமும் பணிவும் மிக்க மனிதர்களை பலரும் விரும்புகின்றார்கள். அடக்கமற்ற மனிதர்களை எவரும் விரும்புவது கிடையாது. எம்மை மற்றவர்கள் மதிக்க வேண்டும் என எதிர்பார்க்கும் நாம் மற்றவர்களை மதிக்க கற்றுக்கொள்வதில்லை. மற்றவர்களுடன் பொறுமையிழந்து வீணாக முரண்பட்டு உறவுநிலைகளைச் சிதைக்கின்றோம். பின்னர் அவ் முரண்பாடுகளை களைவதற்கு முடியாமல் மன வேதனைப்படுகின்றோம்.

பெரியவர்களுக்கு மதிப்பளித்தல் அவர்களின் கருத்துக்களுக்கு மதிப்புக்கொடுத்தல் என்பவை அடக்கமுடமையின் அடிப்படையிலேயே கட்டியெழுப்பப்படுகின்றன.

சிறுவயதில் படித்த ஆலமரத்தினதும் நாணலினதும் கதை பலருக்கு ஞாபகம் இருக்கலாம். சின்னஞ்சிறிய நாணல் புல்லை ஆலமரம் எள்ளி நகையாடியதாகவும் அடுத்து வந்த புயலுடன் கூடிய மழைக்கு ஆலமரம் வேரோடு சாய நாணல் மீண்டும் நிமிர்ந்து நின்றதாகவும் அக் கதை முடிவுறும். அடக்கமுடையவர்கள் சந்தர்ப்பங்கள் வரும் வரை பொறுமையோடு காத்திருந்து பல இடர்களைத் தாங்கி வாழ்க்கையில் வெற்றி பெறுவார்கள்.

ஒரு மனிதனின் வாழ்க்கையில் மாணவப்பருவம் என்பது மிகவும் முக்கியமான பருவமாகும். ஆற்றல்களையும் அறிவையும் அனுபவத்தையும் பெற்றுக்கொள்ளவும் திறமைகளையும் திறன்களையும் வளர்த்துக்கொள்ளவும் எமக்கு கிடைத்துள்ள அருமையான வாழ்வியல் தான் மாணவப்பருவம் என்பது. அம்மாவின் கரம் பிடித்து அ எழுதத் தொடங்கியதும் சின்னச் சின்ன பாதம் வைத்து முன்பள்ளிப் படிகள் ஏறியதும் சிட்டுக்குருவிகள் என வெள்ளைச் சட்டையுடன் பட்டாம் பூச்சிகளாக சுற்றி வருகின்ற பாடசாலைப்பருவமும் வாழ்க்கையின் இலக்குகளை எட்டும் பட்டதாரிகளாக பயிற்றும் பல்கலைக்கழக பருவமும் ஒரு மனிதனின் மாணவப்பருவத்தில் முக்கியமானவையாக அமைகின்றன.

இருந்தும் இன்றைய கல்வியல் சிந்தனைகள் ஒரு மனிதன் வாழும் நாள் முழுவதும் புதிது புதிதாக விடயங்களைக் கற்றுக்கொள்ளும் மனப்பாங்கு கொண்ட மாணவனாக இருக்க வேண்டும் என வலியுறுத்துகின்றன.

“மாண்புற முயல்பவர் மாணவராவார்” என்பது ஆன்றோர்களின் வாக்காகும். எவனொருவன் வாழ்வின் உன்னதங்களையும் உயர்வுகளையும் அடைய வேண்டும் எனும் இலக்கோடு தனது மாணவப்பருவத்திலே அர்ப்பணிப்போடு உழைக்கின்றானோ அவனே உண்மையான மாணவன் ஆகின்றான். அதிலும் நன்மாணாக்கன் எனும் பெயரைப் பெறவேண்டுமாகவிருந்தால் வெறுமனே விடாமுயற்சியும் கடினஉழைப்பும் இருந்தால் போதாது அடக்கமுடமை மிகவும் அவசியமானது.

மேலும் தாய் தந்தையரைப் போற்றவும் ஆசிரியர்களை ஆராதிக்கவும் பெரியவர்களை பேணவும் நண்பர்களையும் உறவுகளையும் மதிக்கவும் கற்றுக்கொள்ளும் ஒருவனே நன்மாணாக்கன் எனும் அடைமொழிக்கு சொந்தக்காரனாகிவிடமுடியும். இவ்வாறான மாணவர்களினாலேயே வீட்டுக்கும் நாட்டுக்கும் பெருமை சேர்க்க முடியும். இத்தகைய பண்பு கொண்ட மாணவ சமூகமே நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லத்தக்க நாளைய தலைவர்களாக நிமிரும் வல்லமையுள்ளவர்கள்.

உலகை மாற்றிப்போட்ட மனிதர்களான புத்தரும் காந்தியும் விவேகானந்தரும் அப்துல்கலாமும் ஆபிரகாம் லிங்கனும் தங்கள் மாணவர்பருவத்தில் நடந்து கொண்ட விதம் தான் அவர்களை வாழ்வில் உயர்த்தியது. சந்தேகங்கள் எழும் போது தயக்கமின்றி குருவிடமும் ஆசிரியரிடமும் வினாக்களை எழுப்பி விளக்கங்களைப் பெற்றுக்கொள்ளும் மாணவன் வித்தையில் சிறந்த விற்பன்னன் ஆகின்றான்.

“இளமையில் கல்” என்பது தமிழ் மூதாட்டி ஔவைக் கிழயின் அருமருந்தான வாக்காகும். நாம் எமது இளம் பருவமாகிய மாணவப்பருவத்தில் கற்றுக்கொள்ளும் விடயங்கள் தான் வாழ்க்கை முழுவதும் எம்மை வழிநடத்துகின்றன. பாடசாலைகளில் இருந்து பாடத்திட்டங்களின் பிரகாரம் அறிவையும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் மூலம் அறிவையும் ஆற்றலையும் பெற்றுக்கொள்கின்றோம். வெற்றி பெறும் போது அடக்கமாகவிருக்கவும் தோல்வியடையும் போது துவளாமல் இருக்கவும் கற்றுக்கொள்ள வேண்டும்.

அத்துடன் நல்லொழுக்கம், தூரநோக்குச் சிந்தனை, விடாமுயற்சி, மமதையற்ற மனம் தோல்வியைக் கண்டு துவண்டு விடாத உள்ளம் என்பவற்றையும் பெற்றுக்கொள்ளும் மாணவனே நல்மாணாக்கனாகின்றான்.ஒரு நல்மாணாக்கன் தான் கற்கின்ற கல்விக்கு ஏற்ற விதத்தில் நடந்து கொள்ள வேண்டும். அதனையே பொய்யாமொழிப் புலவர் திருவள்ளுவர் தனது திருக்குறளில் "கற்க கசடற கற்பவை கற்ற பின் நிற்க அதற்குத் தக" என அருளியிருக்கின்றார்.

அதுபோன்றே மனித வாழ்க்கையில் ஒழுக்கம் என்பதும் மிகவும் முக்கியமானது. ஒழுக்கமற்ற மனிதர்கள் தமக்கும் உலகத்துக்கும் பயனற்றவர்கள். இதனையே வள்ளுவர் "ஒழுக்கம் விழுப்பம் தருவதால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்றார்.எனவே மாணவர்களாகிய நாம் ஒழுக்கம் மிக்கவர்களாக இருக்கவேண்டும். அப்போதே நன் மாணாக்கன் எனும் மகுடத்தை சூடிக்கொள்ள தகுதியுடையவர்களாவோம்.

எனவே பெற்றோரைப் பேணியும் ஆசிரியர்களை மதித்தும் பெரியவர் சொற்கேட்டும் கற்றோரின் அறிவுரைகளை சிரமேற் கொண்டும் கல்வி கற்று அடக்கமுடமையை அணிகலனாக்கி நன்மாணாக்கர்களாக உயர்ந்து வாழ்வில் உயர்வுகளை எட்டுவோமாக.

# சம்பளம் குட்டி கதை

சரவணன் திருமணமானவுடன் வாங்கும் முதல் சம்பளம் இது. அவனுடைய இப்போதைய கவலையெல்லாம் சம்பளத்தை அம்மா ஜானகியிடம் கொடுப்பதா? இல்லை மனைவி சோபனாவிடம் கொடுப்பதா என்பதுதான்.

"இதுவரை அம்மாதான் எல்லாவற்றையும் கவனித்து வந்தாள். வீட்டு வாடகையில் இருந்து, பால்காரன், மளிகைக் கடைக்காரன், குடிக்கிற தண்ணி வரைக்கும் யார் யாருக்கு எவ்வளவு கொடுக்கணும்னு அம்மாவுக்குத்தான் தெரியும். இவளுக்கு எப்படித் தெரியுமா?'

குழம்பிய மனநிலையுடனே வீட்டுக்கு வந்து சேர்ந்தான். "அத்தை கோயிலுக்கு போயிருக்காங்க' என்று காபியை ஆற்றி அவனிடம் கொடுத்தபடி பேச ஆரம்பித்தார். "ஏங்க இன்னிக்கு உங்க சம்பள நாள்தானே...

"ஆமாம்'

"இதோ பாருங்க, இந்த மாசம் பால்காரனுக்கு அறுநூறு ரூபாய். மளிகை கடைக்காரனுக்கு ஆயிரத்து முன்னூறு ரூபாய். வீட்டு வாடகையில் இருந்து குடிக்கிற தண்ணிவரைக்கும் எல்லாம் கணக்குப் போட்டாச்சு. மொத்தம் ஆயிரத்து ஐநூறு ரூபாய் ஆகுது.'

வேறு வழியில்லாமல் சம்பள கவரை மனைவியிடம் கொடுத்து "நீயே எல்லாத்துக்கும் கொடுத்துடு' என்றான்.

"என்கிட்ட எதுக்கு குடுக்கிறீங்க. லிஸ்ட் மட்டுந்தான் நான் போட்டிருக்கிறேன்' என்று தன்னிடம் உள்ள லிஸ்டை அவனிடம் கொடுத்து, "கொண்டு போய் அத்தை கிட்ட குடுங்க. என்னைக்குமே தாய்க்குப் பின் தாரம்' என்றாள். பெரிய குழப்பத்திலிருந்து மீண்ட சந்தோஷம் சரவணனுக்கு.

# அழகாக வாழலாம்!



**முதுமைச்சுருக்கமின்றி இளமையழகுடன் திகழ உண்ணவேண்டிய அழகான உணவுகள்..!**

வைட்டமின் ஈ சத்து நிறைந்த பாதாம், பிஸ்தா, முந்திரிப்பருப்பு போன்ற கொட்டை வகைகள், விதைவகைகளான வேர்க்கடலை மொச்சைப் பயறு வகைகளை அழகிய உணவு வகைகளாக உங்கள் அன்றாட உணவில் அளவோடு சேர்த்துக் கொள்ளுங்கள். அதன் மூலம் உங்கள் மேனி முதுமைச் சுருக்கமின்றி இளமையுடன் திகழும்!

உங்கள் உடம்பின் கொலஸ்ட்ரால் அளவை கட்டுப்படுத்தும் ஹை டென்ஸிட்டி லைபோபுரோட்டின் (ஹைச்.டி.எல்) சத்து நிறைந்த ஆலிவ் எண்ணெய் உங்கள் மேனியை உலர விடாமல் ஈரப்பசையுடன் மின்னிப்பிரகாசிக்கச் செய்யும்!


ஒமேகா 3 கொழுப்பு அமிலச்சத்து, வைட்டமின் பி 12, புரோட்டீன் மற்றும் இரும்புச்சத்து நிறைந்த மீன் மற்றும் மீன் எண்ணெய் உணவு வகைகளில் முதன்மை உணவாகத் திகழ்கிறது! ஒமேகா 3 கொழுப்பு அமிலச்சத்து உங்கள் தலையின் மேற்பகுதியை என்றென்றும் ஈரப்பசையுடன் வளமாகத் திகழச்செய்து தலைமுடி செழிப்பாக வளர உதவுகிறது.

நாள் முழுக்க வேலை செய்தால் கண்கள் சோர்ந்து போகும்.அப்போது வைட்டமின் ஏ சத்து நிறைந்த கேரட்டினை உட்கொள்ளுங்கள். சோர்வு நீங்கி கண்கள் புத்தொளி பெறும். சுறுசுறுப்படைவீர்கள்!

கந்தகம் மற்றும் சிலிகான் சத்து நிறைந்த பிராக்கோலி இலைகள் நக வளர்ச்சிக்கு மட்டுமன்றி மன அமைதிக்கும் உகந்தது. பிராக்கோலி மர இலைகள் கிடைக்காவிடில் அதற்கு இணையான காலிபிளவர் மற்றும் பீட்ரூட் இலைகள் நக வளர்ச்சிக்கு பேருதவி புரிகின்றன.

வைட்டமின் டி சத்து நிறைந்த பால், கால்சியம் சத்து நிறைந்த பச்சை கீரை வகைகள், பாஸ்பரஸ் சத்து நிறைந்த பூசணி விதை போன்றவைகளும் அழகிய உணவுப் பட்டியலில் இடம் பெறுகிறது. அவை எலும்பு வளர்ச்சிக்குத் துணைபுரிந்து, ஆஸ்ட்டியோபீனியா என்ற எலும்புத்தளர்ச்சி மற்றும் வலுவின்மை என்கிற நோயிலிருந்து காப்பாற்றுகிறது. இந்த உணவு வகைகளை நம் அன்றாட உணவில்
அளவோடு உட்கொண்டால் அழகாக வாழலாம்!






**1803** ஆம் ஆண்டு வருட முற்பகுதியில்
ஓர் நள்ளிரவு நேரம் முள்ளியவளையை
மையமாகக் கொண்ட பிரதேசம் ஆரவாரமாகக்
காணப்பட்டது. வன்னியர்களின் அனைத்துப்
படையணிகளும் ஒருங்கிணைக்கப்பட்டு மன்னன் பண்
வன்னியன் தலைமையில் யுத்தத்திற்கான வியூக
வகுக்கப்பட்டுக் கொண்டிருந்தன .வன்னியை கைப்பற்று
புறங்களில் கோட்டைகளை உருவாக்கி படையணிக
ஆங்கிலேய கம்பனியினரை அழித்தொழிப்பதற்கா
நாயகமாக நின்றிருந்த பண்டார வன்னியன் தாலை
அவர்களுக்கான கட்டளைகளை உரத்த குரலிலே
பண்டார வன்னியன் கட்டளைப்படி படையணிகள்
பின்னர் தாக்குதலுக்கான முதலாவது படை
தலைமையில் இயக்கச்சி கோட்டை
கண்டாவளையூடாக

# ாய் மண் மீது
# ங்காப் பற்றுக் கொண்ட
# மாவீரன்

டார
ங்கள்
ும் நோக்குடன் எல்லைப்
களை நிறுத்தியிருக்கும்
க தான் இவ்வியூகம். நடு
ன தளபதிகளை அழைத்து
வழங்கிக் கொண்டிருந்தான்.
ர் மூன்றாக பிரிந்து தயாரான
யணி குமாரசிங்க முதலியார்
யை கைப்பற்றுவதற்காக
நகர்ந்தது.



மற்றைய இரு படையணிகளும் பண்டார வன்னியன் தலைமையிலும் இன்னுமோர் தளபதியின் தலைமையிலும் வெற்றிலைக்கேணி ஆனையிறவு கோட்டைகளை கைப்பற்றுவதற்காக சம நேரத்தில் விரைந்தன. உரிய காலப்பகுதியில் தாக்குதல்களை மறத் தமிழ் படையணிகள் ஆரம்பித்தன. கண்டி யுத்தத்தில் ஆங்கிலேயரின் பெருமளவு படையணிகள் பங்கெடுத்து இருந்தமையால் எஞ்சி நின்ற படை வீரர்களினால் வன்னியர்களின் ஆக்ரோஷமான தாக்குதலை தடுத்து நிறுத்த முடியாமல் போனது. வெகு விரைவிலேயே மூன்று கோட்டைகளும் பண்டார வன்னியன் வசமானது. உடனடியாகவே கைப்பற்றிய கோட்டைகளை இடித்தழிக்குமாறு கட்டளையிட்டான்



வன்னி வீரர்கள் கோட்டைகளை தகர்க்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது தப்பயோடிய ஆங்கிலேயப் படையினர் மேலதிக ஆளனி, ஆயுத உதவியை யாழ்ப்பாணத்திலிருந்து பெற்று பெருமெடுப்பில் முன்னேற்ற நடவடிக்கையை கடல் தரை வழியூடாக ஆரம்பித்தனர். இதனால் தனது யுத்த வியூகத்தை மாற்றியமைத்த பண்டார வன்னியன் தனது படையணிகளை பின் நகருமாறு உத்தரவிட்டான். இறுதியில் வன்னிப் படையணிகள் அனைத்தும் இழப்புக்கள் ஏதும் இன்றி கற்சிலை மடுவை வந்தடைந்தன.



ஆங்கிலேயர்களுக்கு பண்டார வன்னியனின் பலம் பயத்தைக் கொடுத்தது. ஆகவே வன்னியின் பல பகுதிகளையும் கைப்பற்றும் நோக்குடன் பல போர் அரங்குகள் திறக்கப்பட்டன. வன்னி போர் அரங்கு ஆனது. வன்னியர்களும் அன்னியர்களுக்கு அடிபணியோம் மரணம் வந்தாலும் மண்டியிடாது இறுதி வரை அடி கொடுப்போம். என வீர சபதம் செய்து போர்க் கோலம் பூண்டனர். இதனால் வன்னியில் இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடியது. இன் நிலையில் பெரும் ஆள், ஆயுத பலத்துடன் முன்னேறிய ஆங்கிலேயப் படையணிகள் முல்லைத்தீவைக் கைப்பற்றி அங்கு கப்டன் வென்டிறிபேக் தலைமையில் பலமான கோட்டை ஒன்றை நிர்மானித்தனர்.



ஆகஸ்ட் மாத இறுதி தினத்தில் கண்டி மன்னனின் மேலதிக உதவியைப் பெற்ற பண்டார வன்னியன் அதிரடி தாக்குதல் ஒன்றை முல்லைத்தீவில் மேற் கொண்டான். முல்லை மண்ணில் யுத்தம் ஆரம்பமானது. வன்னியர்களின் மயிர்கூச் செறியும் மகத்தான யுத்தத்தைக் கண்டு ஆங்கிலேயர்கள் கிலி கொண்டனர். ஆங்கிலேயர்களின் அதி நவீன



ஆயுதங்களுக்கும் ஆளணி பலத்திற்கும் அஞ்சாது நெஞ்சு நிமிர்த்தி வீரப் போர் புரிந்தனர் வன்னியின் மைந்தர்கள். இத்தகைய ஆக்ரோஷமான திடீர் தாக்குதலை எதிர்பார்க்காத வெண்டிறிபேக் எஞ்சிய தனது வீரர்களுடன் வள்ளத்தில் ஏறி யாழ்ப்பாணத்திற்கு தப்பியோடினான். இத் தோல்வியினால் ஆங்கிலேய தலைமை வன்னியை எவ்வாறு எனினும் வெல்ல வேண்டுமென கங்கனம் கொண்டு கடல், தரை ஆகிய இரு வழிகளிலும் பெருமளவு படையினரை திருகோணமலையில் இருந்து மெட்பின் என்பவன் தலைமையில் அனுப்பி இழந்த பகுதிகளை மீளக் கைப்பற்றிக் கொண்டது. இதனால் பின்வாங்க வேண்டிய சூழ் நிலைக்கு தள்ளப் பட்ட பண்டார வன்னியன் தப்பிச் செல்லும் போது கோட்டையில் இருந்த பீரங்கிகள் மூன்றை கைப்பற்றிச் சென்றான்.



ஆங்கிலேய கம்பனியினர் தங்களுக்கு ஏற்பட்ட அவமானத்தை போக்கவென 1803 ஒக்டோபரில் மன்னார் மற்றும், யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் நிலை கொண்டுள்ள படையணிகளை வன்னியர்களின் அடங்காத ஆற்றலை அடக்கவென வன்னி நோக்கி நகர்த்தினர். முன்னேறிய படையணிகளின் நகர்வை தடுப்பதற்காக மேற்கொண்ட ஊடறுப்பு தாக்குதல்களும், நேரடி தாக்குதல்களும் பயனற்று போயின. காட்டாறு போல ஆங்கிலேய படையணி பெருக்கெடுத்து வந்து கொண்டிருந்தது. கற்சிலை மடுவில் கடும் யுத்தம் மூண்டது. இரு தரப்பும் கடுமையாக மோதிக் கொண்டன. பாரிய உயிர் உடமை இழப்புக்களை இரு தரப்புமே சந்தித்தன. சூரியன் அஸ்தமிக்காத பிரிட்டிஸ் சாம்ராஜ்ஜியத்தின் பெரும் படையணிகளை ஓர் சிறு பிரதேச ஆட்சியாளன் அச்சுறுத்திக் கொண்டிருந்தான்.



இறுதியில் இருப்பை தக்க வைப்பதற்காக தப்பியோட வேண்டிய சூழ்நிலைக்கு பண்டார வன்னியன் தள்ளப்பட்டான். பண்டார வன்னியனை கைது செய்தோ அல்லது கொலை செய்தோ தனது அவமானத்தை போக்க முடியாத வெண்டிறிபேக் கற்சிலை மடுவில் 1803 ஒக்டோபர் 31இல் இங்கு பண்டார வன்னியனை கப்டன் வெண்டிறிபேக் தோற்கடித்தான் என பொறித்து நடுகல் நாட்டி அமைதி கொண்டான்.

மீண்டெழுந்த பண்டார வன்னியன் மீண்டும் ஆங்கிலேயருக்கு எதிரான அதிரடி தாக்குல் ஒன்றை உடையாவூரில் நடத்தினான். ஆனால் காட்டிக் கொடுப்புக்களுக்கும், துரோகங்களுக்கும் பஞ்சமில்லா எம் தேசத்தில் காக்கை

வன்னியன் எனும் கயவனின் பெயரால் துரோகம் ஒன்று அரங்கேறுகின்றது.பண்டார வன்னியனின் தாக்குதல் வியூகத்தை காக்கை வன்னியன் முற்கூட்டியே ஆங்கிலேயர்களுக்கு அறிவித்திருந்தமையால் பண்டார வன்னியன் தாக்குதலை ஆரம்பித்த உடனேயே ஆங்கிலேயர் சுற்றி வளைத்து முற்றுகைக்குள்ளாக்கி தாக்கத் தொடங்கினர். ஆனாலும் கலங்காத வன்னியர்கள் ஆங்கிலேய படையணிகளை கதிகலங்க வைத்தனர். இறுதியில் அடங்காபற்றுடன் ஆங்கிலேயர்களுக்கு அடி கொடுத்துக் கொண்டிருந்த மாவீரன் பண்டார வன்னியன் கடுங் காயங்களிற்கு உள்ளானான். தலைவனின் உயிரை காப்பதற்காக வீரர்கள் கடும் பிரயத்தனப்பட்டனர். தம் மூச்சையே ஆகுதியாக்கினர். இறுதியில் முற்றுகையை உடைத்து கடும் காயத்திற்குள்ளான பண்டார வன்னியனை பனங்காமம் பிரதேசத்திற்கு சுமந்து வந்து சிகிச்சை அளித்தனர். ஆனால் அந்தோ பரிதாபம் வன்னியில் சுதந்திர தமிழ் அரசொன்றை நிறுவி சுதந்திரக் காற்றை சுவாசிக்கச் செய்த பண்டார வன்னியனின் உயிரை அவர்களால் காப்பாற்ற முடியவில்லை. ஓர் சுதந்திர வீரனின் இறுதி சுவாசம் காற்றுடன் கலந்தது.

ஆனால் அக் காற்று நூற்றாண்டு கடந்த நிலையில் பல பண்டார வன்னியர்கள் உருவாக வழிவகுத்தது.



## வெற்றியின் இரகசியம்

தெநோபல் பரிசு பெற்ற ஒரு விஞ்ஞானி இளம் வயதிலேயே சிறந்த அறிவாளியாக விளங்கினார் ஆனால் எந்த வேலையையும் ஒருமைப்பாட்டுடன் செய்யவில்லை. அவரின் போக்கை கண்ட அவரின் தாயார் மிகவும் வருந்தினார். ஒருநாள் அவரை அழைத்து பூதக்கண்ணாடியையும் சில காகிதங்களையும் கொண்டுவரச்சொல்லி, காகிதங்களை கீழே போட்டு கண்ணாடியை வெய்யிலில் காட்டினார்.

பூதக்கண்ணாடியை பிடித்த தாயின் கைகள் இங்கும் அங்குமாய் அசைந்து கொண்டிருந்தது. நீண்ட நேரத்திற்கு பிறகு தனது கைகளை பூதக்கண்ணாடியின் ஒளிக்குவியல் காகிதத்தின் மேல் படுமாறு நீட்டினார். ஒளியின் ஒருமுனையில் தீ காகிதத்தை எரித்தது. இதை கவனத்துடன் பார்த்த இந்த விஞ்ஞானி ஆச்சரியப்பட்டார். அப்போது தாயார் கூறினார், ஒருமுகபடுத்திய ஒளிக்கதிர்கள் நெருப்பாகி காகிதத்தை எரிக்கும். ஆனால் ஒருமுகபடுத்தாத கதிரின் ஒளியில் நெருப்பு உண்டாகாது. அதுபோல் நீயும் உள்ளத்தை ஒருமுகப்படுத்தினால் எந்த வேளையிலும் வெற்றி அடையலாம் என தாயார் அவருக்கு அறிவுரை கூறினார்.

இந்த விஞ்ஞானி தனது மனதில் தாயாரின் வார்த்தைகளை வைத்துக்கொண்டார். அன்று முதல் மன ஒருமைப்பாட்டுடன் தனது செயல்களை செய்ய தொடங்கினார். பிற்காலத்தில் உலகமே போற்றும் சர்.சி. வி. இராமன் ஆனார்


**ஒருவன்** ஆடு ஒன்றை இழுத்துக் கொண்டு செல்லும் போது ஜென் குரு ஒருவர் “எங்கே ஆட்டைக் கொண்டு செல்கின்றாய்” எனக்கேட்டார். பண்டிகை வரப்போகிறது. அதற்கு பலி கொடுப்பதற்கு தான் இந்த ஆட்டை கூட்டிச் செல்கிறேன்” என்று ஒரு குயவன் ஜென் குருவிடம் சொன்னான். ”பலியா?” குரு வியப்புடன் கேட்டார்.

”ஆமாம் சாமி. தெய்வத்துக்கு திருவிழா அன்றைக்குப் பலி கொடுத்தால் விசேஷம். தெய்வம் மகிழ்ந்து வரம் கொடுக்கும். எல்லாம் சுபீட்சமாக யிருக்கும்”

இதைக்கேட்ட குரு எழுந்தார். அந்த குயவனின் மண் பானையை எடுத்து ஓங்கித் தரையில் அடித்தார். பானை துண்டு துண்டாகச்சிதறியது.

குயவன் கோபத்துடன் துறவியைப் பார்த்தான்.

துறவி நிதானமாகக் கீழே குனிந்தார். சிதறிய ஓட்டாஞ் சில்லுகளை ஒன்று விடாமல் அடுக்கினார். குயவனிடம் நீட்டினார்.



# பலி

”என்ன இது?” என்றான் குயவன் கோபமாக.

”உனக்குப் பிடிக்குமே, அப்பா?” என்றார் குரு.

”என்ன உளறுகிறீர்கள். நான் கஷ்டப்பட்டு செய்த பானையை உடைத்து விட்டு அது எனக்கு பிடிக்கும் என்று என்னிடமே நீட்டுகிறீர்கள். கேலியா? கிண்டலா? உங்களுக்கு பித்தா?” என்று ஆத்திரப்பட்டான் குயவன்.

”அப்படியெல்லாம் எதுவும் இல்லையப்பா. உண்மையான அன்புடன் தான் செய்தேன்.” என்று குரு சிறிதும் பதட்டப்படாமல் சொன்னார்.

”நான் செய்த அந்தப் பானையில் என் உழைப்பு முழுவதும் அடங்கியிருக்கிறதே! அதை உடைக்க நான் எப்படிச் சம்மதிப்பேன்? இது எனக்குப் பிடிக்கும் என்று யார் உமக்குச் சொன்னது?”

”நல்லது. ஆண்டவன் படைத்த ஓர் உயிரை கதறக் கதற வெட்டிக் கொன்று பலியிடலாம் என்று உனக்கு யார் சொன்னது? இதை இறைவன் மகிழ்ந்து ஏற்றுக்கொண்டு வரம் தருவான் என்று நீ எப்படி நம்புகிறாய்? எந்தத் தாய் தன் குழந்தை கதறுவதைக் கேட்டு சகிப்பாள்? எந்தத் தகப்பன் தன் குழந்தை கொல்லப்படுவதை விரும்புவான்?” என்று குருவிடமிருந்து அடுக்கடுக்காகக் கேள்விகள் பிறந்தன.

குயவன் நிதானமாக ஆட்டின் கழுத்திலிருந்த கயிற்றை அவிழ்க்கத் தொடங்கினான்.

படிக்காத குயவனுக்கு புரிந்தது படித்த மக்களுக்கு...?



# அபிவிருத்தியா..?

அமரர் சின்னத்துரை வரதராஜன்
2 வருடங்களுக்கு முன்னர்
ஈழமுரசிற்கு எழுதிய
கட்டுரை மீள் பிரசுரம்
செய்யப்படுகின்றது

**கடந்த** வார ஈழமுரசு வாரஏட்டில் வெளியாகிய ஆய்வாளர் அருஷ் எழுதிய "இரகசியமாய் சிதைக்கப்படும் தமிழர் தாயகம் தடுப்பதற்கு வழி என்ன?" என்ற கட்டுரையை வாசித்தேன் மிக நன்றாக இருந்தது. இன்று தாயகத்தில் நடைபெறுவதை நிதர்சனமாகக் காட்டியிருக்கிறார்.

அருஷ் இன் நண்பர் ஒருவருக்கு பஸ்சில் ஏற்பட்ட அனுபவத்தை எழுதியிருந்தார்.. வெளிநாடுகளிலிருந்து இங்கு வருபவர்கள், தனக்கு அருகில் இருப்பவர்கள் தமிழர்களாகத்தான் இருப்பார்கள் என்ற பழைய நினைவில் பேசியது ஆச்சரியமில்லை.

இவ்விடத்தில் எனக்கு ஏற்பட்ட அனுபவத்தைக் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும். அண்மையில் நான் வவுனியா செல்லும் பஸ்சில் சென்றுகொண்டிருக்கும்போது ஒருவர் சாவகச்சேரியில் ஏறி கிளிநொச்சிக்கு டிக்கட் எடுத்தவிட்டு எனக்கு அருகில் அமர்ந்தார். சிறிது நேரத்தில் 'வெலாவ கீயத' என்று சிங்களத்தில் நேரத்தைக் கேட்டார். அவர் தமிழர் என்று எனக்குத் தெரியும். எனவே தமிழிலேயே நேரத்தைக் கூறினேன். அவர் நீங்கள் தமிழா என்று வினாவிவிட்டு என்னுடன் உரையாடினார்.

வெளிநாடுகளிலிருந்து இங்கு வருபவர்கள், தனக்கு அருகில் இருப்பவர்கள் தமிழர்களாகத்தான் இருப்பார்கள் என்று நினைக்கின்றார்கள். ஆனால் இங்கிருப்பவர்கள் தனக்கு அருகில் இருப்பவர்கள் சிங்களவராக இருப்பார் என நினைக்கின்றனர். இதுதான் இன்றைய தாயகத்தின் நிலை.

தமிழர்கள் தென்னிலங்கைக்குச் செல்லும்போது ஏதேனும் தகவல் அறியவேண்டுமாயின், சிங்களத்தில்தான் விசாரிக்க வேண்டும். எதிர்வருங்காலங்களில் யாழ்ப்பாணத்திலும் இதேநிலைதான். யாழ்ப்பாணம் – வவுனியா செல்லும் பஸ்களில் சிலவற்றில் மட்டுமே தமிழ்ப்

பாட்டுக்கள் போடப்படுகின்றன. அனேகமான பஸ்களில் சிங்களப் பாட்டுக்கள் தான் ஒலிக்கின்றன.

தென்னிலங்கை பஸ்களில் எங்கேயாவது தமிழ்ப் பாட்டுக்கள் ஒலிப்பது உண்டா?

ஒரு காலத்தில் எங்கும் தமிழ் எதிலும் தமிழ். சாகும்போதும் தமிழ் மொழிந்து சாகவேண்டும். எந்தன் சாம்பலும் தமிழ் மணந்து வேகவேண்டும் என்று கவிஞன் பாடினான். ஆனால் இன்று எங்கும் சிங்களம் எதிலும் சிங்களம். இதுதான் மகிந்த சிந்தனையின் ஒரே இனம், ஒரே நாடு என்ற தத்துவம். அன்று அபிவிருத்தித் திட்டங்கள் என்ற பெயரில் கிழக்கை இழந்தோம். இன்று அதேபாணியில் வடக்கையும் இழக்கப் போகின்றோம். 50களிலும் 60களிலும் நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டங்கள் என்ற பெயரில் கிழக்கில் சிங்களவர் குடியமர்த்தப்பட்டனர்.
மட்டக்களப்பு மாவட்டத்தின் தென்பகுதியில் (இன்றைய அம்பாறை மாவட்டம்) பின்வரும் குடியேற்றத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.



கல்லோயாக் குடியேற்றத்திட்டம்

எக்கலாறு நீர்ப்பாசனத் திட்டம்

நாமல் ஓயா நீர்ப்பாசனத் திட்டம்

ஜயந்திவிவ நீர்ப்பாசனத் திட்டம்

அம்பலம் ஓயா நீர்ப்பாசனத் திட்டம்

பனலகம நீர்ப்பாசனத் திட்டம்

மகாக்கண்டிய படித்த வாலிபர் குடியேற்றத்திட்டம்

வெலிக்கண்டிய குடியேற்றத்திட்டம்

கித்துள்வெள குடியேற்றத்திட்டம்

பிம்புரட்டாவ குடியேற்றத்திட்டம்

நவக்கிரி குடியேற்றத்திட்டம்

இக் குடியேற்றத்திட்டங்களின் மூலம் கிழக்குமாகாணத்தின் தென்பகுதி சிங்களமயப்படுத்தப்பட்டது. திருகோணமலை மாவட்டத்தில் பின்வரும் குடியேற்றத் திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டன.

கந்தளாய்க் குடியேற்றத் திட்டம்

அல்லைக் குடியேற்றத் திட்டம்

மொறவேவ (முதலிக்குளம்) குடியேற்றத் திட்டம்
வான்எல குடியேற்றத்திட்டம்
மகாதிவுல்வெள (பெரிய விளாங்குளம்) குடியேற்றத் திட்டம்
பதவியா (பதிவில்குளம்) குடியேற்றத் திட்டம்
கல்மெட்டியாவக் குடியேற்றத் திட்டம்

இக் குடியேற்றத்திட்டங்களின் மூலம் திருகோணமலை மாவட்டத்தின் பெரும்பான்மையினராக சிங்களவர் மாற்றப்பட்டனர். இதன்படி கிழக்குமாகாணத்தின் வடபகுதி சிங்களமயப்படுத்தப்பட்டது. கிழக்கு மாகாணத்தின் எஞ்சிய பகுதியாக இருந்தது அதன் மத்திய பகுதியான மட்டக்களப்பு மாவட்டம் மட்டுமே. அதனையும் சிங்களமயப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருந்த காலகட்டத்தில்தான் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக உருவெடுத்தது. அரசாங்கம் தனது சிங்களக் குடியேற்றத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதை இப் போராட்டம் தடுத்து வைத்திருந்தது.

இதனால் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டம் மற்றும் வன்னி, யாழ் மாவட்டங்கள் இதுவரை காலமும் சிங்களக் குடியேற்றங்களிலிருந்த தப்பிப் பிழைத்திருந்தது. ஆனால் இன்று தடுப்பார் யாரும் இல்லை என்ற மமதையில் சிங்களக் குடியேற்றங்களை அரசாங்கம் முழுவீச்சில் மேற்கொண்டு வருகின்றது.

அபிவிருத்தி என்ற மாயமானைக் காட்டி தமிழ் மண்ணை அரசாங்கம் சிங்களமயமாக்குகின்றது. மானின் கவர்ச்சியில் மயங்கிய சீதையினால் தூண்டப்பட்டு மானின் பின்னால் இராமன் ஓட, மானை நெருங்கிய பின்னரே அது மான் அல்ல தம்மை அழிக்கவந்த இராட்சதன் என்னபதை இராமன் உணர, அதற்குள் சீதை இராவணனால் கவரப்பட்டாள். இது இராமாயணம் கூறும் கதை.

சீதையாக தமிழ் மக்களையும் இராமனாக தமிழ் அரசியல்வாதிகளையும், மற்றும் சில புலம்பெயர் தமிழர்களையும் இராவணானாக மகிந்தாவையும் கற்பனைசெய்து பாருங்கள். எதிர்காலத்தில் நடைபெறப்போவது விளங்கும். இன்று அபிவிருத்தியைக் காட்டி மகிந்தா தமிழ் மக்களை மயக்க, தமது ஆற்றாமை காரணமாக மக்களும் அபிவிருத்தி மாயையில் மயங்கிக் கிடக்கின்றனர். இது மக்களின் தவறல்ல. ஆனால் மக்களை சரியானமுறையில் வழிநடத்தவேண்டிய கூட்டமைப்பினரும் அரசாங்கத்தின் இச் சதித்திட்டத்திற்குள் உள்வாங்கப்பட்டிருப்பதுதான் துரதிஸ்டவசமானதும் அபாயகரமானதுமாகும்.

அபிவிருத்தியும் மக்களின் புனர்வாழ்வும் மிகவும் அவசியமானதொன்றுதான். ஆனால் அபிவிருத்தி என்ற பெயரில் எமது மக்களும் மண்ணும் சிங்கள தேசத்தினால் கவரப்படுமாயின் அபிவிருத்தியின் நன்மைகளை அனுபவிக்கப்போவது யார்? இன்று அன்று மானைப் பின்தொடர்ந்ததனால் சீதையைப் பறிகொடுத்த இராமன் சீதையை மீட்டெடுப்பதற்கு உதவ அனுமான் இருந்தார்.

இன்று அபிவிருத்தியைக் காட்டி எமது மண்ணை பறித்த, பறிக்கின்ற சிங்கள அரசாங்கத்திடமிருந்து எமது மண்ணை மீட்டெடுக்க உதவப்போகும் அனுமான் யார்? இன்று நிலத்திலும் புலத்திலும் வாழும் புத்திஜீவிகள் பலர் அரசாங்கத்தோடு இணைந்து செயற்படுவதன்மூலம்தான் தமிழ் மக்களை வாழவைக்கமுடியும் என்றவொரு கருத்தை உருவாக்கிக்கொண்டு வருகின்றனர். ஆனால் தமிழ் மக்களின் வாழ்விடங்களைப் பறிப்பதை

நோக்கமாகக்கொண்டு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் சதித் திட்டங்களுக்கு அறிந்தோ அறியாமலோ அவர்கள் துணைபோகின்றார்கள்.

இன்று யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும் மிகவேகமாக வளர்ந்து வருகின்ற தொழில் வங்கித் தொழில் ஆகும். இலங்கையில் இயங்கும் அனைத்து வணிக வங்கிகளும் நிதிக் கம்பனிகளும் காப்புறுதி நிறுவனங்களும் குத்தகைக் கம்பனிகளும் கடந்த ஒரு வருடகாலத்தில் வன்னியிலும் யாழ்ப்பாணத்திலும் தமது கிளைகளைப் பரப்பி வருகின்றன. (கட்டுரை எழுதிய காலத்தில்)

சாதாரண பெட்டிக்கடைகள் போல் இன்று வங்கிக் கிளைகள் திறக்கப்படுகின்றன. கப்பல் கொள்கலன்கள்தான் வன்னியில் வங்கிக் கிளைகளாக செயற்படுகின்றன. இவ்வளவு அவசரமாக வங்கிக் கிளைகள் திறக்கப்படவேண்டிய அவசியம் என்ன? தமிழ் மக்களின் சேமிப்பைக் கொள்ளையடிப்பதில் வங்கிகளுக்கடையில் காணப்படும் போட்டியின் விளைவே இந்த அவசரம். இவ்வாறு தமிழ்ப் பிரதேசங்களில் திரட்டப்படும் சேமிப்பு இங்கேயே முதலீடாக மாறும் என்றால் அது வரவேற்கத்தக்க விடயம்.

ஆனால் உண்மைநிலை அவ்வாறு இல்லையே. கடந்த காலங்களைப் போல தற்போதும் வடக்கில் சேமிப்பைத் திரட்டி தெற்கில் முதலீடு செய்யும் நடவடிக்கையைத்தான் வங்கிகள் தொடர்ந்து செய்கின்றன. வடக்கில் இயங்கும் வங்கிகள் இன்று வரை தாம் திரட்டிய வைப்புக்களையும் வடக்கில் தாம் வழங்கிய கடன்களையும் பற்றிய தகவல்களை வெளியிடுமா?

இன்று வடக்கிற்கு எத்தனையோ வங்கிகள் வந்துவிட்டன. ஆனால் ஒரேயொரு வங்கி மட்டும் தனது செயற்பாட்டை வடக்கில் ஆரம்பிக்கவில்லை. (கட்டுரை எழுதியகாலத்தில்) அதுதான் பிரதேச அபிவிருத்தி வங்கி. இலங்கை மத்திய வங்கியின் அனுசரனையோடு ஆரம்பிக்கப்பட்டு இயங்கிவரும் வங்கியாகும். இவ்வங்கியின் சிறப்பு அம்சம் என்னவெனில் ஒவ்வொரு மாகாணத்திற்கும் தனி வங்கியாக செயற்படுவதாகும்.

எனவே தான் இயங்கும் மாகாணத்திற்குள்ளேயே சேமிப்புக்களைத் திரட்டி அம் மாகாணத்திற்குள் மட்டுமே கடன்கள் முதலீடுகளை மேற்கொள்ளமுடியும். இதன்படி ஒரு மாகாணத்தின் சேமிப்பு பிறிதொரு மாகாணத்திற்கு எடுத்துச் செல்லப்பட மாட்டாது.



இவ்வாறான பிரதேச அபிவிருத்தி வங்கி மத்திய, வடமத்திய, ஊவா, வடமேல், தென், சப்பிரகமுவ ஆகிய ஆறு மாகாணங்களில் இயங்குகின்றன. மேல் மாகாணம், வட மாகாணம், கிழக்கு மாகாணம் ஆகிய மூன்று மாகாணங்களில் மட்டுமே இவ் வங்கி இயங்கவில்லை. இதில் மேல் மாகாணம் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட கிராமியப் பொருளாதாரத்தைக் கொண்டிருக்கவில்லை. எனவே இவ் வங்கியின் தேவை இம் மாகாணத்திற்கு இல்லை.

ஆனால் தமிழ் மாகாணங்களான வடக்கு கிழக்கில் ஏன் இவை ஆரம்பிக்கப்படவில்லை? முன்னர் யுத்தம் தான் காரணம் என்றால் தற்போது என்ன தடை உள்ளது? வடக்கிற்கு இவ்வளவு வேகமாக அனைத்து வங்கிகளும் படையெடுத்துவரும்போது ஓர் அரச வங்கியான பிரதேச அபிவிருத்தி வங்கி மட்டும் ஏன் உருவாக்கப்படவில்லை? காரணம் வெளிப்படையானது. இவ் வங்கி இங்கு அமைக்கப்பட்டால் இங்கு திரட்டப்படும் சேமிப்பு முழுவதும் இங்கேயே முதலீடு செய்யப்படவேண்டும். தெற்கிற்கு அதனை எடுத்துச் செல்லமுடியாது. இந்த ஒரேயொரு காரணத்தினால் இவ் வங்கி இங்கு அமைக்கப்படவில்லை.

வங்கிகளை உருவாக்குவதிலேயே இவ்வளவு தந்திரத்தைப் பின்பற்றும் அரசாங்கம் தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பும் என்று நம்புவது எவ்வளவு முட்டாள்தனம். எனவே அபிவிருத்தி என்ற மாயைக்குள் நாம் சிக்குவோமேயானால் எமது மக்களும் அழியப் போகின்றார்கள் வாழ்விடமும் பறிபோகப் போகின்றது. எனவே எமது மக்களையும் வாழ்விடத்தையும் பாதுகாத்துக் கொண்டு அபிவிருத்தியை மேற்கொள்ளக் கூடிய ஒரு பாதையை நாம் தெரிந்தெடுக்கவேண்டிய ஒரு இக்கட்டான நிலையில் உள்ளோம். நிலத்திலும் புலத்திலும் உள்ளவர்கள் ஒருங்கிணைந்து இதற்கான ஒரு பொறிமுறையை உருவாக்குவோம். மண்ணையும் பாதுகாப்போம். மக்களையும் பாதுகாப்போம். அபிவிருத்தியையும் மேற்கொள்வோம்.

**கிடி ஜோக்**

**மனைவி முன்னாள் காதலனின் அணைப்பில் இருந்தபோது கணவன் வந்துவிட்டான்.**

**அவ்வளவுதான்!**

**தன் கையில் இருந்த ரிவால்வரை எடுத்து அவளை அந்தக்கணமே சுட்டுக் கொன்றுவிட்டான்.**

**வழக்கு விசாரணைக்கு வந்தது.**

**ஐரோப்பாவில் நடைபெற்ற பிரபல வழக்குகளில் இதுவும் ஒன்றாகியது.**
**இறுதியில்இ 'இது நியாயமான கொலைதான்! அவன் குற்றவாளியல்ல! அந்த நிலையில் எந்தக்கணவனும் அப்படித்தான் செய்திருப்பான்!' என்று கோர்ட் தீர்ப்பளித்தது.**
**விடுதலையான அவன் இறுமாப்புடன் வெளியே சென்றபோது நீதிபதி அவனை அருகில் அழைத்து ரகசியமாகக் கேட்டார் –**

**'எனக்கு ஒரு சந்தேகம் அந்தக் கள்ளக் காதலனைச் சுட்டுக்கொல்லாமல் ஏன் உன் மனைவியைச் சுட்டுக்கொன்றாய்?'**

**அவன் மீசையை முறுக்கியவாறே பதில் சொன்னான் – 'வாராவாரம் ஒருவனைச் சுட்டுக்கொல்வதற்குப் பதில் ஒரேயடியாக ஒருத்தியைச் சுட்டுக்கொல்வது மேல் என்று நினைத்தேன்!**

# முயற்சி

குரு மரண படுக்கையில் இருந்தார்..

அருகில் அவரின் சீடன் கவலை தோய்ந்த முகத்துடன் காணப்பட்டான்.

குரு மெல்ல அவனை அழைத்து, " சிஷ்யா.. ஏன் கவலைப்படுகிறாய்? உனக்காக நான் எப்பொழும் இருப்பேன். கலக்கம் அடையாதே" என்றார்

கலங்கிய கண்களுடன் சிஷ்யன் கூறினான்.. "குருதேவா நீங்கள் கூறியபடி ஜபம் தியானம் எல்லாம் செய்து வருகிறேன். ஆனால் ஆன்மீக உயர்நிலை அடையும் காலம் எப்பொழுது என தெரியவில்லை. எதுவரை எனது ஆன்மீக பயிற்சியை தொடர்வது. உங்கள் காலத்திற்கு பிறகு யாரிடம் நான் கேட்பது?"

அணையும் ஜோதி பிரகாசகமாக சுடர்விடும் என்பதை போல ஜோதிமயமான முகத்துடன் சிஷ்யனை பார்த்தார் குரு.. "கவலை கொள்ளாதே. இந்த கட்டிலுக்கு அடியில் ஓர் பெட்டி இருக்கிறது. அதன் உள்ளே உனக்கு பிற்காலத்தில் உபதேசிக்க வேண்டியதை வைத்திருக்கிறேன் அது அனைத்து விஷயங்களையும் போதிக்கும். எனது உபதேசம் தேவைப்படும் பொழுது மட்டும் பெட்டியை திறந்து பார். எனது ஆசிகள்"என கூறியபடி அவரின் ப்ராணன் உள்ளே அடங்கியது.

நாட்கள் சென்றன

தனது ஆன்மீக சாதனையில் தனக்கு பலன் கிடைப்பதாக சிஷ்யனுக்கு தெரியவில்லை.. தியானம் , ஜபம் ஆகியவற்றை விட்டுவிடலாமா என எண்ணினான்.. குருவின் உபதேசத்தை கேட்க பெட்டியை திறந்தான்.

சிஷயன் ஞானம் அடைந்தான்..

நாட்கள் சென்றன

சிஷ்யன் கூறிய கருத்துகளை மக்கள் ஏற்காமல் கலகம் செய்தனர்.

மீண்டும் குருவின் உபதேசத்தை கேட்க பெட்டியை திறந்தான்..

அதற்கு பின் வரும் காலத்தில் மக்கள் கருத்துக்களை ஏற்றுக்கொண்டனர்

நாட்கள் சென்றன

தனது இறுதி காலத்தை அடைந்தான்.. தனது சிஷ்யனை கூப்பிட்டு கூறினான்..

"எனது பிரிய சிஷ்யா.. எனது குரு எனக்கு அளித்த உபதேசத்தை உனக்கு அளிக்கிறேன். எனது உபதேசம் தேவையான பொழுது மட்டும் இந்த பெட்டியை திற. எனது உபதேசம் கிட்டும்."

சிஷ்யனுக்கு சிஷ்யனான பரம சிஷ்யன்.. தனது ஆன்மீக சாதனையில் தொய்வு ஏற்பட்டது. குருவின் உபதேசம் அறிய பெட்டியை திறந்தான்..

அதில் எழுதி இருந்த வாசகம்

"இன்னொரு முறை முயற்சி செய்"

**சிஷ்யனுக்கு மட்டுமல்ல நமக்கும் எல்லாவற்றிலும் இந்த உபதேசம் உதவும்**

குரு கதை

# Dead Sea

# சாக்கடல்

**இறந்த** கடல் அல்லது செத்த கடல் அல்லது சாக்கடல் என்றழைக்கப்படும் இந்த ஏரிதான் இஸ்ரேலையும் (பாலஸ்தீனம் மேற்குக் கரை) ஜோர்டானையும் பிரிக்கிறது. பள்ளி நாட்களில் புவியியல் புத்தகங்களில் படித்திருப்பீர்கள், உலகின் மிகவும் தாழ்வான இடமான இங்குள்ள நீரின் உவர்ப்பால் எந்த உயிரினமும் வாழ முடியாது, இதன் அடர்த்தியால் எவராலும் இதனுள் மூழ்க முடியாது.

இஸ்ரேல் ஜோர்டான் எல்லையில் மத்தியதரைக் கடலோடு சேர்ந்திருக்கும் ஒரு உப்பு நீர் ஏரிதான் சாக்கடல் உண்மையில் இதற்கு சாக்கடல் என்ற பெயர் பொருந்தாது. முதலாவதாக இந்தப் பெயர் குறிப்பிடுவதுபோல இது ஒரு கடல் அல்ல.

இது ஒரு பெரிய ஏரிதான். உலகத்திலேயே மிகவும் அடர்த்தி மிகுந்த உப்பு நீர் உள்ள ஏரி இது. உப்பு மற்றும் மற்ற உப்புப் பொருட்களின் அதிகமான அடர்த்தியின் காரணத்தால் மீன்களோ மற்ற சாதாரண நீர் வாழ் உயிரினங்களோ இங்கே வாழ முடியாது.

இந்தக் காரணத்தால்தான் இதை சாக்கடல் என்று அழைக்கிறார்கள். ஆயினும் இங்கும் இந்தப் பெயர் குழப்பத்தை ஏற்படுத்துகிறது. சாக்கடல் என்ற பெயரைக் கேட்கும்போது எந்த ஒரு உயிரினமும் இல்லாத கடல் என்றுதானே நாம் நினைப் போம்? அது தவறு. உப்பை



உணவாகக் கொள்கின்ற பலவித நுண் உயிரிகள் சாக்கடலில் நல்லபடியாக வாழ்கின்றன.

ஹாலோ பாக்டீரியம், ஹாலோபியம், ட்யூனா லைலா எனும் நுண் உயிரிகளை உதாரணமாகச் சொல்லலாம். இவை சூரிய ஒளியைப் பயன்படுத்தி உணவை உருவாக்கிக்கொள்ளும் திறன் பெற்றவை. இவை, தாவரங்களில் உள்ள குளோரோபிலுக்குச் சமமான ஒரு இயற்கைப் பொருளை தாமாகவே உற்பத்தி செய்து, அதன் உதவியுடன் உணவை உற்பத்தி செய்துகொள்கின்றன.

சாக்கடலில் தண்ணீர் மிகவும் அடர்த்தியாக இருப்பதால் அதில் மனிதர்கள் மூழ்குவது சிரமம். மனிதர்கள் அதில் மிதக்கலாம். சாக்கடலில் படுத்தபடி பத்திரிகை படிக்கின்ற வெளிநாட்டுப் பயணிகளின் படங்கள் பிரபலமானவை.

முழுவதுமாக நிலத்தால் சூழப்பட்ட இக்கடல் ஓர் உவர் நீரேரி ஆகும். 377 மீட்டர் (1237 அடி) ஆழமுடைய சாக்கடல், பொதுவான கடல்நீரிலுள்ள உப்புத்தன்மையை விட 8.6 மடங்கு அதிகளவு உவர்ப்புடைய நீரைக் கொண்டது. கடல் மட்டத்திலிருந்து தற்போது 423 மீட்டர் (1388 அடி) கீழே அமைந்திருக்கிற சாக்கடல் தொடர்ந்தும் கீழிறங்குகிறது. இவ்விறக்கம் பூமியின் மேல் ஓடுகளின் விரிசலினால் ஏற்படுகிறது.

சாக்கடலின் நீளம் 67 கி.மீ (42 மைல்) மிகுதியான அகலம் 18 கி.மீ (11 மைல்). இதற்கு யோர்தான் ஆற்றிலிருந்தே பெருமளவில் நீர் கிடைக்கிறது. சாக்கடலுக்கு அடியிலும் அதைச் சுற்றியும் உள்ள நீரூற்றுகளிலிருந்தும் நீர் கிடைக்கிறது. இதனால் இந்த ஏரியைச் சுற்றி சிறிய நீர்த்தேக்கங்களும் புதைமணல் பகுதிகளும் உருவாகியுள்ளன. இந்த சாக் கடலில் பொட்டாசியம், மக்னீசியம், புரோமைடுகள் உள்ளிட்ட பொருட்கள் பெருமளவில் கிடைக்கின்றன. இவை ரசாயன மற்றும் ரசாயன உரத் தொழிற்சாலைகளுக்கு



பயன்படுத்தப்படுகின்றன. எகிப்தில் ஆயிரம் ஆண்டுகளாக மம்மிக்கள் கெட்டுப் போகாமல் இருக்க காரணம் சாக்கடலில் இருந்து எடுக்கப்பட்ட ஒரு வகைப் பொருள்கள்தான். சாக்கடல் நீரை இரண்டு முழுங்கு குடிக்க நேர்ந்தால் குரல் வளைப் பகுதி வீக்கம் கண்டுவிடும். அதனால் மூச்சு விட முடியாமல் போகலாம். சாக்கடல் நீர் கண்களில் பட்டால் பார்வை பறி போகின்ற ஆபத்து உண்டு.

சாக்கடல் நீரிலும் சேற்றிலும் கலந்துள்ள மருத்துவகுணங்கள் தோல் நோய்களுக்குச் சிகிச்சையளிக்கப் பயன்படுத்தப்படுகிறது. இச்சேறு சொரியாசிஸ் உட்பட சில தோல் கோளாறுகளைக் குணப்படுத்துவதாகக் கருதப்படுகிறது. இதற்காகவே ஏராளமான பேர் இங்கு வந்து சாக்கடல் சேற்றை உடலில் பூசிக் கொள்கின்றனர். இதனாலேயே சாக்கடலுக்கு the lowest health spa மற்றும் நேச்சுரல் ஸ்பா (natural spa) என்ற பெயரும் உண்டு. உலகிலேயே மிக தாழ்வான பகுதி என்ற மற்றொரு சிறப்பும் சாக்கடலுக்கு உண்டு.

இத்தனை பெருமை கொண்ட சாக்கடலின் முக்கிய நீர் ஆதாரமான ஜார்டன் நதி நீரின் அளவு தற்போது குறைந்து கொண்டே வருவதால் இந்தக் கடலின் பரப்பு குறைந்து கொண்டு வருகிறது என்பதுதான் கவலையளிக்கும் செய்தி. ஜோர்டானிலும், யார்மோக் ஆறுகளின் மூலமாகவும் மனித பயன்பாட்டிற்காக அதிக அளவில் நீர் எடுத்தது ஒரு காரணமாக கூறப்படுகிறது. மேலும் இஸ்ரேலும் ஜோர்டானும் தங்களுடைய பொட்டாஷ் தொழிற்சாலைகளுக்கு தேவையான நீரை சாக்கடலில் இருந்து எடுத்துள்ளன.


கடந்த முப்பது வருடங்களில் சாக்கடலின் நீர்மட்டம் ஆண்டிற்கு 0.7 மீட்டர் குறைந்து வருகிறது. நீரின் கன அளவு ஆண்டிற்கு 0.47 கன கிமீ குறைந்து வருகிறது. நீர்ப்பரப்பின் அளவும் ஆண்டிற்கு 4 சதுர கிமீ அளவில் குறைந்து வருகிறது என்று இந்தக்குழுவின் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

## சிந்தனைக்கு


குளிர்பதன வசதியுள்ள வாகனத்தில் சிவா தன் தந்தையை உட்கார வைத்து நகர்வலம் வந்து கொண்டு இருக்கும் வேளையில், "அப்பா உங்கள் வாழ்க்கையில் சொத்துசுகம், சேமிப்பு ஏதுமே இல்லாமல் எழுபது வயதைக் கடந்து விட்டீர்களே' என்றான். வண்டி ஒரு கல்யாணப் பந்தலருகே போகும்போது நிறுத்தச் சொன்னார் தந்தை "தம்பி பந்தலில் உள்ள வாழை மரத்தைப் பார்த்தாயா" இதன் சரித்திரம், என்ன, தெரியுமா? இது தன்னுடைய வாழ்நாளில் இலை, பூ, காய், கனி, பட்டை ஆகிய எல்லாவற்றையும் தானமாக கொடுத்து விடுகிறது. இந்த வாழை மரத்தின் சேமிப்பு கன்றுகள் மட்டும்தான். இந்த வாழ்க்கைத் தத்துவம் மணமக்களுக்கும் புரிய வேண்டுமென்பதற்காகத் தான் நம்முடைய முன்னோர்கள் மணப்பந்தலில் வாழை மரம் கட்டுவதை பழக்கமாக வைத்தார்கள்.

தந்தை கொடுத்த உயிர்தான் மனிதனுக்கு மூலதனம். அதைக் கொண்டு முன்னேறுவதுதான் தனக்கும் தன்னுடைய தந்தைக்கும் பெருமை. இயற்கை விதியின்படி வாழும் மரங்களுக்கு துன்பமோ துயரமோ கிடையாது புரிந்துகொள்' என்றார் தந்தை.

# இல்லை
## இல்லவே இல்லை




தேளுக்கு காது இல்லை
அரேபியாவில் ஆறுகள் இல்லை.
அத்தி, பலா மரங்கள் பூ பூப்பதில்லை.
ஆமைக்குப் பற்கள் இல்லை.
இந்திய ஜனாதிபதிக்கு ஓய்வு பெறும் வயதிற்கு வரம்பு இல்லை.
இனிப்பை உணர்ந்தறியும் சக்தி பூனைக்கில்லை.
இலந்தை மரங்களில் பறவைகள் கூடு கட்டுவதில்லை.
ஈசலுக்கு வயிறு இல்லை.
உலகில் 26 நாடுகளில் கடலோ, கடற்கரையோ இல்லை.
ஐஸ்லாந்தில் ரெயில்கள் இல்லை.
ஒட்டகங்களுக்கு நீந்தத் தெரிவதில்லை.
ஹவாய்த் தீவில் பாம்புகள் இல்லை.
கடலில் முதலைகள் வாழ்வதில்லை.
பல்லி தண்ணீர் குடிப்பதே இல்லை.
பக்ரைன் நாட்டு தேசியகீதத்தில் வார்த்தைகளே இல்லை.
மாசிடோனியா நாட்டுக்கு தேசியக் கொடி இல்லை.
மலைப் பாம்புகளுக்கு நஞ்சு இல்லை.
யமுனை நதி கடலில் கலப்பதில்லை.
யானையின் துதிக்கையில் எலும்புகள் இல்லை.
வண்ணத்துப் பூச்சிகளுக்கு வாயில்லை.
ஜோர்டான் நதியில் மீன்கள் இல்லை.
ஸ்பெயின் நாட்டில் தந்தை பெயரை முதல் எழுத்தாகப் பயன்படுத்து



கிவி பறவைக்கு இறக்கைகள் இல்லை.
குயில்கள் கூடு கட்டி வாழ்வதில்லை.
குயில்கள் குளிர் காலத்தில் கூவுவதில்லை.
பூட்டான் நாட்டில் திரை அரங்குகள் இல்லை.
சிங்கபூரில் காகம் இல்லை
ஆண் கொசு கடிப்பதில்லை
மண் புழுவில் ஆண் பெண் கண்ணும் இல்லை
டால்பின் நீர் அருந்துவதில்லை
நெதர்லாந்தின் கைத்துர்ண் கிராமத்தில் சாலைகள் இல்லை

இ ராமநாதபுரத்தை ஆண்ட முத்து ராமலிங்கசேதுபதி, முத்தாள் நாச்சியார் தம்பதிகளின் புதல்வர் தான் பாஸ்கரசேதுபதி. இவரது சகோதரர் தினகர் சேதுபதி 1868 நவம்பர் மூன்றாம் தேதிபிறந்தார். இந்நிலையில் இராமநாதபுரம் அரண்மனையை ஆங்கிலேயர்கள் எடுத்துக் கொண்டதுமில்லாமல், அதை சமஸ்தானமாக்கி விட்டார்கள். பாஸ்கரசேதுபதி பிறந்த ஐந்தே ஆண்டுகளில் அவரது தந்தையும்(1873) இறந்து விட்டார். அவரை வளர்க்கும் பொறுப்பை ஆங்கில அரசாங்கம் எடுத்துக் கொண்டது. அவரை சென்னைக்கு கொண்டுவந்து எழும்பூரில் உள்ள ஒரு தனியார் பள்ளியில் சேர்த்து கல்வி புகட்டியது.

பாஸ்கரசேதுபதி ஆங்கிலம், தமிழ் மொழிகளோடு இசை, விளையாட்டு என்று தன் திறமைகளை வளர்த்துக்கொண்டார். டென்னிஸ் பியானோவாசித்தல், ஓவியம் வரைதல் ஆகியவற்றின்மீது அதிக ஈடுபாடு இருந்தது. நம் நாட்டின் மொழி, கலாச்சாரம் ஆகியவற்றின் மீது ஆழ்ந்தபற்றும் நம்பிக்கையும் கொண்டிருந்



பாஸ்கரசேதுபதி

# தமிழும் சைவமும் வளர்த்த பாஸ்கரசேதுபதி


தார். கி.பி.1888 ஆம் ஆண்டு எம்.ஏ. பட்டப்படிப்பை முடித்த சேதுபதி தன்னுடைய சமஸ்தா னத்துக்குத் திரும்பினார். தனது இருபத்தொன்றாவது வயதில் சமஸ்தானப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

பாஸ்கரசேதுபதிக்கு இந்தியஅரசு “மகாராஜா” என்றுபட்டம் கொடுத்து கௌரவப்படுத்தியது. அமெரிக்காவில் அனைத்துமத கூட்டம் நடைபெறுவதாகவும், அதில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறும் பாஸ்கரசேதுபதிக்கு அழைப்பு வந்தது. ஆனால் சேதுபதிக்கு அதில் தான் கலந்துகொள்வதை விட தன்னைவிட ஆன்மிகத்திலும், பேச்சிலும், செயலிலும் சிறப்புற்றுவிளங்கும் சுவாமிவிவேகானந்தர் கலந்து கொண்டால் நன்றாக இருக்கும் என்றுயோசித்தார். தன்னுடைய யோசனையை தனக்கும், விவேகானந்தருக்கும் பொதுவான நண்பராக விளங்கிய ஜஸ்டிஸ் சுப்பிரமணிஐயர் மூலம் தெரிவிக்க, முதலில் யோசித்து சொல்வதாகச் சொன்ன விவேகானந்தர், பின்னர் சம்மதம் தெரிவித்தார்.

விவேகானந்தர் பயணிக்கத் தேவையான செலவுகள் அனைத்தையும் பாஸ்கரசேதுபதியே ஏற்றார். 1893 ஆம் ஆண்டு விவேகானந்தர் கன்னியாக்குமரியில் இருந்து கடல்வழியாக அமெரிக்காவிற்குப் பயணமானார். விவேகானந்தரின்

தோற்றம் மட்டுமல்ல, அவருடைய பேச்சும் ஆங்கிலேய மக்களைக் கவர்ந்தது. நான்காண்டுகளுக்குப் பின் 1897 இல் பாம்பன் துறைமுகத்தில் விவேகானந்தர் வந்திறங்கியபோது மன்னர் பாஸ்கரசேதுபதி விவேகானந்தரின் பாதங்களைத் தரையில் படவிடாமல், தன் தலையில் வைத்து இறங்குமாறு பணித்தார். அத்துடன் விவேகானந்தர் பயணிக்க கொண்டுவந்த அலங்காரவண்டியை மாடுகளுக்குப் பதிலாக மன்னரும், அரண்மனை ஊழியர்களும் ஊர்வலமாக இழுத்துச் சென்றனர்.

பீரங்கிகள் முழுங்க ஒரு மன்னரை வரவேற்பது போல் அரண்மனைக்குள் அழைத்துச் சென்றனர். கலியுகத்து ராஜரிஷி என்று பாஸ்கருக்கு பட்டமளித்தார் விவேகானந்தர். தன் அன்பிற்கும் மதிப்பிற்கும் பாத்திரமான விவேகானந்தர் இறந்த போது மிகவும் மனம் உடைந்துபோனார் மன்னர். புலவர்களுக்கும்,கோயில்களுக்கும் மிகுந்த தானதருமங்களை வாரி இறைத்தார். திருவாவடுதுறை மடத்துக்கு இரண்டாயிரம் ஏக்கர் நிலங்களை தானமாக வழங்கினார். இப்படி வருவோர்க்கெல்லாம் தானதருமங்கள் செய்வதைக்கண்ட சிருங்கேரி மடத்தின் சாமிகள் மன்னரிடம், “உங்கள் அரண்மனையை எனக்குத் தானமாகக் கொடுங்கள்” என்றுகேட்டார். உடனே பாஸ்கரசேதுபதி “தானமாக கொடுத்துவிட்டேன். எடுத்துக் கொள்ளுங்கள்” என்று கூறியதோடு அரண்மனையைவிட்டும் வெளியேறிவிட்டார். சாமிகள் மனம் நெகிழ்ந்துப் போய் அரண்மனையை திரும்பமன்னரின் மகன் முத்துராமலிங்கசேதுபதிக்கே தானமாகத் தந்துவிட்டார். பாஸ்கரசேதுபதி மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கம் தொடங்க காரணமாக இருந்தார். 1901 ல் தொடங்கப் பட்ட இச்சங்கத்தில் உ.வே. சாமிநாதஐயர், இரா.இராகவஐயங்கார், பரிதிமாற் கலைஞர், பின்னாத்தூர் நாராயணசாமி போன்றோர் இச்சங்கத்தில் அங்கம் வகித்தனர். இச்சங்கம் மூலம் சிறந்தபுலவர்களுக்கும், இலக்கியங்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.




சேதுபதிக்கு முதுகில் கட்டிவந்து தொல்லைக் கொடுத்தது. இதனால் அவர் அடிக்கடி மடத்தில் போய் தங்கிவிட்டார். 1903 ஆம் ஆண்டுடிசம்பர் 27 ந் தேதி தனது முப்பத்தைந்தாவது வயதிலேயே இவ்வுலகவாழ்வைமுடித்துக்கொண்டார் மன்னர்.

மதுரையிலிருந்து ராமேஸ்வரம் சென்றமுதல் இரயிலில் தான் பாஸ்கர சேதுபதியின் பூதஉடல் கடைசியாகப் பயணித்தது. ■

# யார் இந்த தோழர் பாலாத்தம்பு?

**தா.குகநேசன்**
(முன்னாள் அமைப்பாளர்
இலங்கை வங்கி ஊழியர் சங்கம்)




தோழர்களாலும் நண்பர்களாலும் மற்றும் எதிரிகளாலும் நன்கு அறியப்பட்ட தோழர் பாலாத்தம்பு அவர்கள் செப்டம்பர் மாதம் 1ம் திகதி 2014ம் ஆண்டு காலமானார் என்ற செய்தி இலங்கையின் அரசியல் தொழிற்சங்க வரலாற்றில் ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஓர் நிகழ்வாகும்.

ஏறக்குறைய ஒன்பது தசாப்தங்களுக்கு மேல் இவ் உலகில் பயணித்த பாலாத்தம்பு அவர்கள் பல இலட்சக் கணக்கான மக்களின் குறிப்பாக தொழிலாளர்கள் மற்றும் உரிமை மறுக்கப்பட்டவர்களின் மனங்களில் சதா உயிர் வாழ்ந்து கொண்டிருப்பார். கல்வி, சட்டம் மற்றும் ஏனைய துறைகளிலும் அவரின் பன்முக பரிணாம ஆளுமைகள் காரணமாக வரலாற்றில் தடம் பதித்துள்ளார்.

ஒவ்வொரு போராட்டத்திலும் ஒவ்வொரு தலைவர் உருவாகுவது போல தோழர் பாலாத்தம்பு அவர்களும் 1947ம் ஆண்டு பொது வேலை நிறுத்தத்தின் மூலம் தொழிற் சங்க வரலாற்றில் காலடி எடுத்து வைத்தார். இதனைத் தொடர்ந்து ஏறக் குறைய ஆறு தசாப்பதங்கள் இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளராக கடமையாற்றினார். அக் காலப் பகுதியில் அவர் எத்தனையோ சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டி இருந்தது. தனி மனிதனாக நின்று தனது திறமையினாலும் மற்றும் அர்ப்பணிப்பினாலும் தொழிலாள வர்க்கத்திற்கு ஒரு வழி காட்டியாக விளங்கினார்.




அருட் தந்தை ஜெயசீலன் அவர்களின் தலைமையில் யாழில் நடைபெற்ற அஞ்சலி கூட்டத்தில்

இலங்கையில் 1930களில் பல்வேறு ஆளுமைகளினால் உருவாக்கப்பட்ட லங்கா சமசமாஜாக் கட்சியில் தன்னை இணைத்து கட்சி முன்னெடுத்து சகல போராட்டங்களிலும் பங்கு பற்றினார். ஆனால் 60களில் லங்கா சமசமாஜக் கட்சி முதலாளித் துவ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன்

இணைந்து ஆட்சிப் பீடம் ஏறிய போது அவர் அக்கட்சியில் இருந்து பிரிந்த குழு வின் தலைவராகத் தொடர்ந்தும் அரசியலில் ஆடுபட்டார். எனி னும் தேசிய, சர்வதேச ரீதியிலும் ஏற்பட்ட சமூக பொருளாதார அரசியலில் ஏற்பட்ட மாற்றித்தின் காரணமாக அவரின் அரசியல் வாழ்வு ஒரு தேக்க நிலையை அடைந்தது. இது இலங்கையின் அரசியல் வரலாற்றின் ஒரு துன்பியல் நிகழ்வாகும்.

பொதுவாக தொழிலாள வர்க்கம் என்று கூறினாலும் அவர் தனியார் துறை, கூட்டுத்தாபன ஊழியர்களை பிரதிநிதித்துவம் செய்யும் வர்த்தக ஊழியர் சங்கத்தின் மூலமாக அவர்களின் கோரிக்கைகளை வென்றெடுத்தார். குறிப்பாக கூட்டுப் பேரம் பேசுதல், தொழில் முடிவுறுத்தும் போது தொழிலாளர் பெறும் நன்மைகள் போன்றவற்றின் காரணமாக தொழிலாளர்கள் பாரிய நன்மை அடைந்தார்கள். வாழ்க்கைச் செலவு சுட்டெண்ணின் படி சம்பள அதிகரிப்பைப் பெற்றமை தொழிலாளருக்கு ஒரு வரப் பிரசாதமாகும்.

1970களின் பின்னர் இலங்கையில் மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு மக்களிடையே ஏற்படத் தொடக்கியது. 1971இல் இடம் பெற்ற ஜே.வி.பி.யின் ஆயுதக் கிளர்ச்சியைத் தொடர்ந்து தலைவர் உரோகண விஜய வீரா உட்பட பல இளைஞர்கள் சிறையில் அடைக்கப் பட்டனர். அவர்களின்அரசியல் சித்தாந்தங்களை ஏற்றுக் கொள்ளாத போதும் அவர்களின் விடுதலைக்காக நீதி மன்றங்களில் வாதாடினார். அதே போல் வணக்கத்துக்குரிய சிங்கராஜா அடிகளார் சிறையில் அடைக்கப்பட்ட போது அவரின் விடுதலைக்காகவும் நீதிமன்றத்தில் வாதாடினார்.

இவரின் பணி நாட்டிலுள்ள தொழிற் சங்க இயக்கத்தோடு மட்டும் நின்று விட வில்லை. சர்வதேச தொழிற்சங்க கூட்டங் ளிலும், மற்றும் மகாநாடுகளிலும் பங்கு பற்றி அவர்களின் கோரிக்கைகளுக் குக் குரல் கொடுத்தார். ஆகவே சர்வதேச பாட்டாளி வர்க்கத்தின் குரலாகவும் இவர் ஒலித்தார். ஆவரின் நீண்ட நாள் கட்சி சார்பற்ற தொழிற்சங்க அனுபவ காரண மாக இலங்கையில் உள்ள பல்வேறு தொழிற் சங்கங்கள் தொழிற் சங்கப் போராட்டங்களை ஆரம்பிக்கும் போது இவரின் ஆலோசனை, மற்றும் வழிகாட் டல் போன்வற்றை வேண்டி நின்றன. குறிப்பாக இலங்கை வங்கி ஊழியர் சங்கம், பல்கலைக்கழக ஆசிரியர்

இக் கட்டுரை ஆசிரியரும் ஒரு பழைய இடதுசாரி மார்க்சியவாதியாகையால் அண்மையில் அவர் இங்கிலாந்திற்கு விஜயம் செய்த போது கார்ல் மாக்ஸ் கல்லறைக்குச் சென்று அஞ்சலி செலுத்தினார்



சம்மேளனம் போன்றவை அவரின் பெறுமதி மிக்க ஆலோசனையைப் பெற்றமை நினைவிற்கு வருகின்றது.

இவரின் வாழ்வு ஆரம்பம் முதல் முடிவு வரை போராட்டங்களையே தரிசனமாகக் கொண்டது. அவரின் குடும்பப் பின்னணி கிறிஸ்தவ விழுமியங்களை ஏற்றுக் கொண்டதனால் இயல்பாகவே இவர் மனிதாபிமானம் கொண்டவராக விளங்கினார். இதுவே இவர் ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பில் தன் வாழ்க்கையை அர்ப்பணிக்க வழிசமைத்தது எனலாம். "அநீதி எங்கிருந்தாலும் அது நீதிக்கு அச்சுறுத்தலாக அமையும்" என்ற முது மொழிக்கு அமைய இவர் குரல் கொடுத்து வந்தார். இவரது கொள்கையில் மாறுபட்டோர். இவரது அணுகு முறை காரணமாக இவரை வர்க்க எதிரி என வர்ணித்தது முண்டு. ஆனால் தன்னுடைய அரசியல், தொழிற் சங்க செயற்பாடுகள் காரணமாக இவரின் நாமம் நிலைத்திருக்கும் என்பதில் ஐய மில்லை.

## கிச் கிச்

கந்தசாமி ஒரு நாள் படுக்க போகுறதுக்கு முன்னாடி அவன் மகன் ரமேஷ்அழுதுகிட்டு இருந்ததை பார்த்தான்.
"ஏண்டா அழுகிறாய்?""
அது ஒண்ணுமில்லை நைனா. அத்தை சாகுற மாதிரி கனவு கண்டேன்""அட. உன்னோட அத்தை ஒலகத்துலே எல்லாரையும் சாகடிச்சிட்டு தான்டா கடைசியாசாவா. நீ பயப்படாம தூங்கு"
அடுத்த நாளே ரமேஷின் அத்தை செத்து விடுகிறாள்.
அடுத்த வாரத்தில் ஒருநாள், ரமேஷ் அதே போல அழுது கொண்டிருக்கிறான். "ஏன்டா அழுவுற?""
என்னோட வாத்தியார் சாவுற மாதிரி கனவு"
அடப்போடா. அப்படியெல்லாம் ஆகாது"அடுத்த நாளே ரமேஷின் வாத்தியார் மண்டையை போட்டார்.
அதற்கடுத்த வாரம், அதே போல அழுது கொண்டிருந்தான் ரமேஷ்."அடேய்...நாளைக்கு யாருடா சாவப் போறான்?""அப்பா..!"
அடப்பாவி...கடைசியா என்னையே சாவடிச்சிக்கிறியே". புலம்பியவாறே மறுநாள் கோயில் கோயிலாக சென்று சாமியை வேண்டிக் கொண்டேயிருந்தான் கந்தசாமி. எப்படியிருந்தாலும் சாவு நிச்சயம் என்று வேறு பயந்தான்.அப்படியே ஒரு கோயிலிலேயே படுத்து தூங்கியும் விட்டான். மறுநாள் காலைஎழுந்து பார்த்தால், ....அட..சாகவில்லை. ஜாலியா வீட்டுக்கு போனான்.அவனது மனைவி அங்கே கத்திக் கொண்டிருந்தாள் :"யோவ், நேத்து எங்கேயா போனே?எதிர்த்த வீட்டுக்காரரு திடீர்ன்னு செத்து போயிட்டாரு!
கந்தசாமி ::,????????????????



# கைமாறு (உண்மைச் சம்பவம்)

வீடு வீடாக பொருட்களை விநியோகிக்கும் அந்த சிறுவனுக்கு ரொம்ப பசித்தது. எதையாவது வாங்கி சாப்பிடலாம் என்றால் கையில் பணமே இல்லை. அருகில் இருந்த வீட்டில் ஏதாவது சாப்பிட கேட்கலாம் என்று நினைத்தான்.

அந்த வீட்டின் கதவைத் தட்டினான். ஒரு பெண் கதவைத் திறந்தாள். ஏதாவது கேட்கலாம் என்று நினைத்தான். ஆனால் கூச்சம். கேட்க மனம்வரவில்லை.

"கொ... கொஞ்சம் தண்ணி கிடைக்குமா குடிக்க?" தயக்கத்துடன் கேட்கிறான்.

அவள் சிறுவனின் கண்களில் இருந்த பசியை கவனிக்கிறாள். உள்ளே சென்றவள், ஒரு கப் பாலை கொண்டு வந்து கொடுத்தாள்.

பாலைக் குடித்து பசியாறிய சிறுவன் கேட்டான்... "நான் எவ்வளவு கடன்பட்டிருக்கிறேன்?"

"கடனா... அப்படி ஒன்றும் இல்லை. அன்பான செயலுக்கு விலை எதுவும் இல்லை என்று என் அம்மா சொல்லியிருக்கிறார்." அவள் சிரித்துக்கொண்டே சொன்னாள்.

"ரொம்ப நன்றி..." சிறுவன் புன்னகையுடன் கடந்து சென்றான்.

ஆண்டுகள் கழிந்தன. கஷ்டப்பட்டு முட்டி மோதி படிப்பை முடித்த அந்த சிறுவன் மருத்துவம் படித்து அந்த நகரிலேயே மிகப் பெரிய டாக்டர் ஆனான். அந்த பெண்ணுக்கோ ஒரு கொடிய நோய் வந்தது.

அவர் பணியாற்றிய மருத்துவமனையிலேயே அவளும் அனுமதிக்கப்பட்டிருந்தாள். அந்த டாக்டரிடமே அவளுடைய பரிசோதனையும் வந்தது. மெடிக்கல் ரிப்போர்ட்டில் அந்த பெண்ணின் ஊர் பெயரை பார்த்ததும் அவருக்குள் ஒரு சின்ன மின்னல். விரைவாக வார்டுக்கு போய் அந்த பெண்ணை பார்த்தார். அவள் தான் தனது பசியாற்றிய அந்த தாய்.

அன்று முதல் தனது அத்தனை உழைப்பையும் கவனத்தையும் செலுத்தி அந்த பெண்ணுக்கு சிகிச்சை அளித்தார். நீண்ட சிகிச்சைக்கு பின்னர் அவள் குணமானாள். பல லட்சங்கள் செலவானது. மருத்துவமனை அந்த பெண்ணுக்கு ஒரு நீண்ட பில்லை அனுப்பியது. இதை எப்படி கட்டப்போகிறோமோ என்று பதட்டத்துடன் அதை பிரித்தவள் திகைத்துப் போனாள்.

அந்த பில்லின் கடைசியில் கையால் எழுதப்பட்டிருந்தது.


"இந்த பில்லை நீங்கள் செலுத்தவேண்டியதில்லை. ஒரு கப் பாலில் உங்கள் கடன் முழுதும் தீர்க்கப்பட்டுவிட்டது. இது நன்றி சொல்லும் நேரம்!"

அவளுக்கு கண்கள் பனித்தன.

அந்த சிறுவன் வேறு யாருமல்ல... அமெரிக்காவின் மிகப் பிரபல மருத்துவராக விளங்கிய DR. HOWARD KELLY (1858-1943) தான்.



Dr. Howard Kelly



# சந்தேகம்

– உண்மைக் கதை

ஒரு இராணுவ வீரனும், ஒரு இளம் பெண்ணும் காதலித்துத் திருமணம் செய்து கொள்கிறார்கள். மூன்றே மாதத்தில் ஈராக்கில் போர் ஏற்பட இராணுவ வீரன் போருக்குப் போக வேண்டியதாகி விடுகின்றது. அவன் போகும் போது மனைவி கர்ப்பிணி. இருவருமே மிகுந்த மன வருத்தத்தில் பிரிகிறார்கள். போர் முடிந்து உயிரோடு திரும்புவது நிச்சயமில்லையல்லவா?

ஆனால் அதிர்ஷ்டவசமாக போருக்குப் போன வீரன் மூன்றாண்டுகள் கழிந்து வெற்றிகரமாக திரும்புகிறான்.. விமானதளத்தில் அவன் மனைவியும், மகனும் அவனுக்காகக் காத்திருக்கிறார்கள். மனைவியையும் மகனையும் ஆனந்தமாகக் கட்டியணைத்துக் கொள்கிறான் அந்த வீரன். அவன் கண்ணிலும், மனைவி கண்ணிலும் ஆனந்தக் கண்ணீர்.

வீடு திரும்புகிறார்கள். கணவனுக்குப் பிடித்த சமையல் செய்ய சாமான்கள் வாங்கி வர மனைவி மார்க்கெட்டுக்குச் செல்ல வீட்டில் மகனும், தந்தையும் மட்டுமே இருக்கிறார்கள்.

கூச்சத்துடன் ஒதுங்கி நின்ற மகனைப் பார்த்து வீரன் கேட்கிறான். "அப்பாவுடன் ஏன் பேச மாட்டேன்கிறாய்?"

அந்தச் சிறுவன் குழப்பத்துடன் தந்தையைப் பார்த்து விட்டு சொல்கிறான். "நீங்கள் ஒன்றும் என் அப்பா இல்லை"

வீரன் மகனைக் கேட்கிறான். "பின் யார் அப்பா?"

"தினமும் என் அம்மா நிற்கும் போது நிற்பார். அம்மா உட்காரும் போது அவரும் உட்கார்வார். படுக்கும் போது அவரும் கூடப் படுத்துக் கொள்வார். அவர் தான் என் அப்பா என்று அம்மா சொல்லியிருக்கிறாள்"

வீரனுக்குக் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியது போல இருந்தது.

மனைவி சாமான்கள் வாங்கிக் கொண்டு வந்த பின் கணவனிடம் திடீர் மாற்றத்தைக் கண்டாள். அவன் அவள் சமைத்ததை உண்ணவில்லை. அவளை அவன் தொடவில்லை. அவள் அவன் அருகில் வருவதைக் கூட அவன் மறுத்தான். இரண்டு நாட்கள் இப்படியே நிகழ மனைவி மனமுடைந்து தற்கொலை செய்து கொள்கிறாள்.

மனைவி இறந்த அன்று இரவு தந்தையும் மகனும் படுக்கச் செல்லும் போது தந்தையின் நிழலைக் காண்பித்து மகன் சொல்கிறான். "இதோ என் அப்பா"

திகைத்த வீரன் மகனை விசாரிக்கும் போது உண்மை வெளிவந்தது. தாயின் நிழலைப் பார்த்த மகன் ஒரு நாள் இது யார் என்று வெகுளித் தனமாய் கேட்ட போது, மகன் தந்தை அருகில் இல்லாத குறையை உணரக் கூடாது என்று அவள் இது தான் உன் தந்தை என்று சொல்ல சிறுவன் அன்றிலிருந்து அந்த நிழலையே தந்தையாக நினைத்து வந்திருக்கிறான்.

வீரன் தாங்க முடியாத குற்றவுணர்ச்சியாலும், துக்கத்தாலும் மனமுடைந்து போகிறான்.

இந்தக் கதையில் மகன் சொன்னதைக் கேட்ட வீரன் தன் மனைவியிடம் விளக்கம் கேட்டிருக்கலாம்.. மனைவியும் கணவனின் நடவடிக்கைக்கு விளக்கம் கேட்டிருக்கலாம். இருவரும் வெளிப்படையாக மனம் விட்டுப் பேசியிருந்தால் அவர்கள் வாழ்க்கை ஆனந்தமாகச் சென்றிருக்கும். ஆனால் கணவன் தன் மனைவியின் நடத்தை மோசமாக இருந்திருக்கிறது என்று தானாக முடிவெடுத்து அப்படி வெறுப்புடன் நடந்து கொண்டான். மனைவியாவது ஏன் இப்படி நடந்து கொள்கிறீர்கள் என்று அவனைப் பதில் சொல்ல வற்புறுத்தியிருக்கலாம். அப்படிச் செய்யாமல் தானாக வாழ்க்கையை முடித்துக் கொண்டாள். ஒரு குடும்பமே தகர்ந்து போனது வாய் விட்டுக் கேளாமல், மனம் விட்டுப் பேசாமல் இருந்ததனால் அல்லவா?

## முல்லா ஒரு நாள்

முல்லா ஒரு நாள் அழுதுகொண்டிருந்தார். அவரது நண்பர் கேட்டார்: "முல்லா, ஏன் அழுகிறாய்?"

முல்லா சொன்னார்: "சென்ற மாதம் எனது பாட்டி ஐந்து இலட்ச ரூபாய் சொத்தை எனக்கு எழுதிவைத்துவிட்டு இறந்துவிட்டார்."

நண்பர் கேட்டார்: "அட மகிழ்ச்சியான செய்திதானே, ஏன் அழுகிறாய்?"

முல்லா சொன்னார்: " பதினைந்து நாட்களுக்குமுன் எனது பெரியப்பா இருபது இலட்ச ரூபாய் சொத்தை எனக்கு எழுதிவைத்துவிட்டு இறந்துவிட்டார்."

நண்பர் கேட்டார்: "மகிழ்ச்சியான செய்தி! அதற்காக ஏன் அழுகிறாய்?"

முல்லா சொன்னார்: "சென்ற வாரம் எனக்கு 30 இலட்ச ரூபாய் சொத்தை எழுதிவத்துவிட்டு எனது அத்தை இறந்துவிட்டார்."

நண்பர் கேட்டார்: "சந்தோஷப்படுவதைவிட்டு ஏன் அழுகிறாய்?"

முல்லா சொன்னார்: "மூன்று நாட்களுக்குமுன் எனது தாத்தா இறக்கும்முன் 50 இலட்ச ரூபாயை எனக்கு எழுதிவைத்துவிட்டார்."

நண்பர் கேட்டார்: "கொண்டாடாமல் ஏனப்பா அழுகிறாய்?"

முல்லா சொன்னார்: "இனிமேல் சொத்தை எழுதிவைத்துவிட்டு இறந்துபோறதுக்கு எனக்கு பணக்கார சொந்தக்காரர்கள் இல்லையே,
அதனால தான் அழுதுகிட்டு இருக்கிறேன்" கேட்ட நண்பர் மயக்கம்போட்டு கீழே விழுந்துவிட்டார்.

# படியல்கள்:

சப்பாத்திக்கு மாவு
பிசைவதற்கு முன்னால்
கையில் சிறிதளவு
உப்பைத்
தடவிக் கொண்டால்
கையில்
சப்பாத்தி மாவு
ஒட்டாது.

அரிசி மற்றும்
காய்கறிகள்
கழுவிய தண்ணீரை
வீணாக்காமல்
செடிகளுக்கு
ஊற்றினால்
செடிகள் செழிப்பாக
இருக்கும்

உருளைக்கிழங்கு வேக
வைத்த தண்ணீரில்
பாத்திரங்களை
கழுவினால்
பாத்திரங்கள்
பளபளப்பாக
இருக்கும்.

வெயில் காலத்தில்
பெருங்காயம்
கட்டியாகி விடும்.
அப்படி ஆகாமலிருக்க
பச்சை மிளகாயை காம்பு
எடுக்காமல்
பெருங்காய டப்பாவில்
போட்டால்
பஞ்சு போல் மிருதுவாக
இருக்கும்.

# சொல்லூல்கள்

சப்பாத்தி
போடும்போது
சப்பாத்தி போடும்
கட்டையில் முதலில்
உருண்டையாக
போட்டுவிட்டு பின்பு
அதனை நாலாக
மடித்து உருட்டி
போட்டால்
சப்பாத்தி மிருதுவாக
இருக்கும்.

தயிர் நீண்ட நேரம்
புளிக்காமல்
இருக்க இஞ்சியின்
தோலை சீவி விட்டு
கொஞ்சம்
தட்டி தயிரில்
போட்டால்
புளிக்கவே
புளிக்காது.

இட்லி சாம்பாரில் கடைசியாக மிளகு, சீரகம், காய்ந்த மிளகாய், கொத்தமல்லி போன்றவற்றை ஒரு பாத்திரத்தில் போட்டு வறுத்து விட்டு மிக்ஸியில் அரைத்து சாம்பாரில் போட்டால் கூடுதல் சுவையாக இருக்கும்.

சமையலில் உப்பு அதிகமாக போய்விட்டால் உருளைகிழங்கை அதில் அறிந்து போட்டால் உப்பை எடுத்துவிடும்.

# பின்பற்றுங்கள்

நெய் ப்ரெஷ்ஷாக இருப்பதற்கு அதோடு ஒரு வெல்லத்துண்டை போட்டு வைத்தால் ப்ரெஷ்ஷாக இருக்கும்.

எண்ணெய் பலகாரங்கள் டப்பாவில் வைக்கும்போது உப்பைத் துணியில் முடிந்து வைத்தால் காரல் வாடை வராது.

காய்கறிகளை வேகவைக்கும்போது அதிக தண்ணீர் வைத்து வேக வைக்க கூடாது. ஏன் என்றால் காய்கறிகளில் உள்ள வைட்டமின் சத்துகள் போய்விடும். அதில் உள்ள மனமும் போய்விடும். காய்ந்த

தோசை சுடும்போது தோசைக்கல்லில் மாவு ஒட்டிக்கொண்டு தோசை வராமல் இருந்தால் அதற்கு கொஞ்சம் புளியை ஒரு வெள்ளைத்துணியில் கட்டி, அதை எண்ணெய்யில் தொட்டு கல்லில் தேய்த்துவிட்டு தோசை சுட்டால் நன்றாக வரும்.

# என்ன செய்யப் போகிறீர்கள் ?



## 01 க.பொ.த உயர்தரத்தின் பின்னரான வாழ்க்கையை எவ்வாறு திட்டமிட்டுள்ளோம்.?

சிறு வயது மாணவர்கள் தாம் எவ்வாறு வரவேண்டும் என்ற உயர்ந்த கனவுகளுடன் கற்று வருகின்றார்கள். அவர்களின் கனவிற்கு க.பொ.த உயர்தரப்பரீட்சை என்பது மிக உயர்ந்த தடைக்கல்லாக அமைகின்றது.

உண்மையில் சுமார் இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் பேர் தோற்றும் இப்பரீட்சையில் சுமார் முப்பதினாயிரம் பேர் மாத்திரமே பல்கலைக்கழக அனுமதியை பெறுகின்றனர். சுமார் இரண்டு லட்சத்து இருபதினாயிரம் மாணவர்கள் தாம் எவ்வாறான நிலையை அடைவது என்பதில் தெளிவின்மை காணப்படுகின்றது. இவர்களில் அனேகம் பேர் தோல்வி மனப்பாண்மையுடனும், அனுமதி பெற்றவர்கள் கூட தாம் விரும்பிய துறையை அடையவில்லை என்ற ஆதங்கத்துடனும் காணப்படுகின்றனர். இவர்களிற்கு எம்மால் இயன்ற வழிகாட்டுதல்களை புரியவேண்டியது எமது கடமையாகும்.

## 02 க.பொ.த உயர்தரத்தின் பின்னரான காலம் ஏன் முக்கியமானது?

ஒவ்வொரு மாணவனிடத்தும் மிகுந்த மாற்றத்தை கொண்டுவரும் காலம் இதுவாகும். 14 வருடங்கள் ஒரே மாதிரியாக அமைந்த பாடசாலைக்கல்வி முடிவடைந்து உண்மையான திறந்த உலகத்தில் பிரவேசிக்கும் காலம். மாணவருக்கும் மட்டுமல்லாது பெற்றோருக்கும் பாடாசாலை செல்லாது வீட்டில் நிற்கும் மாணவனின் எதிர்காலம் தொடர்பாக மிகுந்த மனஅழுத்தத்தையும் கொடுக்கும் காலம். அவர்களின் எதிர்காலப்பயனத்தை தீர்மானிக்கக்கூடிய தொழில் பற்றியதும் அது தொடர்பான கற்கைகளையும் பயிற்சிகளையும் சிந்திக்கும் காலம்.

## 03 தமது பிள்ளைகள் தொடர்பாக அனேகமான பெற்றோர்களின் எதிர்பார்ப்பு எவ்வாறு உள்ளது?

அனேகமான பெற்றோர்கள் தமது பிள்ளைகள் இவ்வாறுதான் வரவேண்டும் என தமது மனதில் ஓர் திட்டத்தை வைத்துள்ளார்கள். இது ஓர் நல்ல விடயம். ஆனால் அவர்கள் தற்போதைய கால மாற்றத்திற்கமைய எவ்வாறான தொழில்சார் கற்கை நெறிகளிற்கு வரவேற்பு என்பதைப்பற்றி அறிந்து தீர்மானம் எடுக்க வேண்டும்.

## 04 உயர்தரத்தின் பின்னர் எவ்வாறான துறைகளை கல்வியை கருத்தில் எடுக்கலாம்.?

ஒருமாணவன் உயர்தரப்பாடத்தில் கற்ற விடயத்தை தான் பின்னர் கற்கவேண்டும் என்றில்லை. தொழில் தொடர்பான தேடலுக்கேற்க அவன் கற்கை நெறியை பயில முடியும். உதாரணமாக விஞ்ஞானத்துறையை பயின்ற ஓர் மாணவன் சி.ஐ.எம்.ஏ போன்ற கணக்கியல் துறையில் பிரகாசிக்க முடியும். இவ்வாறே கலைத்துறையை பயின்ற மாணவன் தகவல் தொழில்நுட்பத்துறையில் உயர்ந்த வேலையை பெறமுடியும்.





## 05 எவ்வாறு இதை தீர்மானிப்பது?

சரியான ஆலோசனைகளிற்கு அமைய பெற்றோர்கள் சில தெரிவுகளை மேற்கொண்டு தமது பிள்ளைகளின் விருப்பத்தினையும் கருத்தில் எடுத்து தீர்மானிக்க முடியும்.

## 06 எவ்வாறு தெரிவுகளை மேற்கொள்வது?

10 ஆண்டுகளிற்கு முன்னர் ஓர் குறிப்பிட்ட சில தெரிவுகளே இருந்தன. இன்று ஒரு மாணவனின் விருப்பத்தினை கருத்திலெடுக்கும் போது ஏராளமான துறைகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு துறையினதும் தொழில் வாய்ப்பு, செலவு, காலம் என்பவற்றை கருத்திலெடுத்து முடிவுக்கு வரமுடியும். பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்கள் கூட இன்று வேலைவாய்ப்பு கருதி ஏனைய கற்கை நெறிகளினையும் பயின்று வருகின்றனர்.

மாணவர்களுக்கு நாம் வழங்கும் சில தெரிவுகள் க.பொ.த உயர்தரத்தின் பின்னரும் பல்கலைக்கழக அனுமதி வரையுமான காலத்தில் பயன்தரும் வகையில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்ட அனுசரனையுடன் ஆரம்பிக்கப்பட்ட யாழ் பல்கலைக்கழக்கழகத்திற்கு அண்மையில் அமைந்துள்ள எம்.சி.எஸ் நிறுவனம் பின்வரும் தெரிவுகளை உங்கள் முன்மொழிந்து அதற்குரிய புலமைப்பரிசிலினையும் வழங்குகின்றது.

1. CIMA –UK
2. CMA- Sri Lanka
3. BIT-University of Colombo
4. Network Computer Engineering –USA
5. Software Engineering – USA

மேற்படி கற்கை நெறிகளை க.பொ.த உயர்தரம் சித்தியடையாதவர்களும் அடிப்படைப்பயிற்சியினைப் பூர்த்தி செய்வதன் மூலம் பயில முடியும்.

இதன் தொழில் வாய்ப்பு சம்பந்தமான விபரங்களை எமது நிறுவனத்தில் பார்வையிட முடியும்.

மேலும் 3ஏ சித்தி பெற்ற மாணவர்களிற்கு 100% மும் ஏ சித்தி பெற்றோருக்கு 50% மும் ஏனையோருக்கு 25% மும் கற்கை நெறிக் கட்டணத்தில் புலமைப்பரிசிலாக வழங்கப்படும். மேலும் ஒரு துறைக்கு கட்டணம் செலுத்தும் மாணவர்கள் ஏனைய துறையொன்றையும் கற்கை நெறிக்கட்டணமின்றி பயில முடியும்.

### புலமைப்பரிசிலிற்கான வினா

The inventor, founder, & chairman of Twitter is…?

A. Jack Dorsey. B. Mark_Zuckerberg
C. Hoffman D. Billgates

Type <KAL><NAME>Ans & send to 772395895


**MCS IT CAMPUS**

34,Sir.Pon.Ramanathan Road, Thirunelvely, Jaffna

TP : 021 222 6373

- குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்
- மும்மொழிகளிலும் வாகனப்பயிற்சி
- எழுத, வாசிக்கத் தெரியாதவர்களுக்கு விசேட வீடியோ வகுப்பு நடைமுறை
- கனரக சாரதி அனுமதிப்பத்திரம் பெற அசோக் லேடன் பஸ் மூலம் இலகுவான பயிற்சி
- தவணைமுறைக் கட்டணமும், விரும்பிய நேரத்திலான பயிற்சி
- இரவு நேர வாகனப்பயிற்சி 6.00p.m - 9.00p.m



**NO.1**
சாரதி பயிற்சிப் பாடசாலை

KIRUBA LEARNERS

# KIRUBA LEARNERS

**Government Approved Driving Trainning School**

## கிருபா லேணர்ஸ்

**அரச அங்கீகாரம் பெற்ற கனரக (A) சாரதிப் பயிற்சிப் பாடசாலை**



**தலைமைக் காரியாலயம் : 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 4353 / 021 492 3200 / 077 722 5292**

### யாழ்ப்பாணம் :

- முதலாம் கட்டைச்சந்தி, பருத்தித்துறை. 021 492 3201, 071 454 6958
- விக்னேஸ்வரா கல்லூரி வீதி, நெல்லியடி. 021 300 6550, 071 454 6957
- இல. 227/6, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம். (மதவடி அண்மையில்) 021 224 2022, 071 454 6956
- கண்டி வீதி, சாவகச்சேரி. (பேரூந்து நிலையம் அண்மையில்) 021 492 3202, 021 227 0700

### கிளிநொச்சி :

- A9 வீதி, கிளிநொச்சி. (கச்சேரி முன்பாக) 021 228 5505, 071 454 6955
- புளியடிச்சந்தி, முல்லை வீதி, விசுவமடு. 021 320 1515, 071 454 6955
- வாடியடி சந்தி, பூநகரி. 021 320 1818, 071 454 6955
- நாச்சிக்குடா சந்தி, மன்னார் வீதி, முழங்காவில். 021 300 6544, 071 454 6955


### மன்னார் :

இல. 94, பிரதான வீதி, மன்னார்.
071 988 7699
077 847 2732

### வவுனியா :

216, A9 வீதி, வவுனியா.
(வசந்தி திரையரங்கு முன்)
021 222 7777
071 454 6953

Andra Design



# லிங்கனும் கனவும்

ஆப்ரகாம் லிங்கன் தனது முடிவை கனவின் மூலம் கண்டார் எனக் கூறப்படுகின்றது

இறப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன்பு Ward Hill Lamon என்ற நண்பருடன் பேசிக்கொண்டு இருக்கையில் தனது கனவை பற்றி கூறினார்.
அவர் கூறியது "

பத்து நாட்களுக்கு முன்பு மிகவும் தாமதமாக ஓய்வு எடுக்க சென்றேன். மிகுந்த களைப்பின் காரணமாய் உடனே உறங்கி விட்டேன். சிறுது நேரத்தில் கனவு காண தொடங்கினேன்.

அங்கே மரண அமைதி இருந்தது. பிறகு நான் விசும்பல்களை கேட்டேன். பலர் அழுது கொண்டிருந்தனர்.

பின்பு மெத்தையை விட்டு கீழ்த்தளத்தில் வந்து அலைந்து கொண்டிருந்தேன் என நினைக்கிறேன். அதே உருக்கமான அழுகையால் அங்கிருந்த அமைதி உடைந்தது.

ஆனால் அழுபவர்கள் கண்ணுக்கு புலப்படாமல் இருந்தனர். நான் ஒவ்வொரு அறையாக சென்றேன். எங்கும் யாருமே தென்படவில்லை. ஆனால் அதே துன்பத்தின் ஓசை நான் கடந்தபோது என்னை சந்தித்தது.

அனைத்தும் அறைகளிலும் விளக்கெரிவதைப் பார்த்தேன்.எல்லா பொருட்களும் பழக்கப்பட்டவையாக இருந்தன.

ஆனால் இதயங்கள் உடைந்துவிடும் அளவுக்கு அழுது கொண்டிருக்கும் மக்கள் எங்கே? எனக்கு புதிராகவும் திகைக்க வைப்பதாகவும் இருந்தது.

இவை அனைத்திற்கும் என்ன அர்த்தம்? இந்த சூழ்நிலையின் காரணத்தை கண்டுபிடிக்க உறுதியாய் இருந்தேன்.அவை மர்மமாகவும் அதிர்ச்சியாகவும் இருந்தது. கிழக்குப் பக்க அறைக்கு செல்லும் வரை அப்படிதான் இருந்தது. அங்கே ஒரு வருந்தத்தக்க ஆச்சர்யத்தை சந்தித்தேன்.

எனக்கு முன்னாள் ஒரு பாடை (சவப்பெட்டியை ஏற்றிசெல்லும் வண்டி) இருந்தது. அதன் மேல் ஈமச்சடங்களுக்கான உடையணியப்பட்ட ஒரு பிணம் இருந்தது.

சுற்றிலும் படை வீரர்கள் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தனர்.கூட்டம் கூட்டமாக மக்கள் பிணத்தை பார்த்து அழுது கொண்டிருந்தனர்.

பிணத்தின் முகம் மூடப்பட்டிருந்தது. "வெள்ளை மாளிகையில் இறந்தது யார்?" என படை வீரர்களுள் ஒருவனிடம் கேட்டேன். அவன் "ஜனாதிபதி", ஒருவனால் கொல்லப்பட்டார்" என்றான். பின்பு கூட்டத்திலிருந்து பெரும் அழுகை ஏற்பட்டது.

நான் விழித்துக் கொண்டேன். அதன் பின்பு அந்த இரவு நான் தூங்கவில்லை.அது வெறும் கனவுதான் என்றபோதிலும் எப்போதும் என்னை வித்தியாசமாக நச்சரித்தது." - என்பதாகும்
.

இந்த கனவு கண்டு இரண்டாவது வாரம் , ஏப்ரல் மாதம் 14-ஆம் தேதி John Wilkes Booth என்பவனால் லிங்கன் படுகொலை செய்யப்பட்டார் .
அவருடைய உடல் மக்களின் பார்வைக்காக வெள்ளை மாளிகையின் கிழக்குப் பக்க அறையில் கிடத்தப்பட்டிருந்தது


VSB
Trading
Company
(Pvt) Ltd.
வி.எஸ்.பி
ரேடிங் கம்பனி
(பிரைவேற்) லிமிட்டட்
Agent for :
PRIMA CEYLON LIMITED
PLAIN FLOUR
Prima
SRI LANKA
1977
இல. 140, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 7195
021 222 6968
Email : v.s.bt.c.p.l@gmail.com


மங்களா
காட்சியறை
Furniture
Showroom
A Quality
Wood Furniture
Products
Mangala Showroom
#536, K.K.S Road, Manogara Junction, Jaffna.
021 222 8367


சாரங்கா
நகைமாடம்
Saranga Jewellery
அழகிய
தங்கநகைகளின்
காட்சியறை
சாரங்கன்
நகைமாடம்
சாரங்கா நகை மாடம்
SARANGA JEWELLERY
No - 157/1, KASTHURIYAR ROAD, JAFFNA. TELEPHONE : 021 2226972, FAX : 021 2228869
SARANGA MONEY EXCHANGE (PVT) LTD
SARANGA MONEY EXCHANGE (PVT) LTD.
021 222 6972
157/1, Kasthuriyar Road, Jaffna.


திருமண அழைப்பிதழ்களின் காட்சியறை
Mega Cards
HINDU AND CHRISTIAN CARDS
PRINT Master
136, K.K.S. Road, Kulapiddy Junction, Kokuvil.
021 205 3322